43883
9

# வீரத் தமிழருக்கு!

## ஆவேசக் கடிதங்கள்

439
OFFICE OF THE REGISTRAR
MAR
MADRAS
OFFICE OF THE REGISTRAR OF
MAR
0-4MSB,V
N47
105782

சுத்தானந்த பாரதியார்

# வீரத் தமிழருக்கு!

## ஆவேசக் கடிதங்கள்

ஆசிரியர் :—

சுவாமி சுத்தானந்த பாரதியார்

நியூ இந்தியா புக் ஹௌஸ்

இராமச்சந்திரபுரம் (P. O.)

திருச்சி ஜில்லா

பதிப்புரிமை]          1947          [விலை 1-6-0

C 3883

M. I. P. PROJECT
Microfilmed.

# அன்பு மாலை

O-,4MSB,V
N47

பாரதத்தாய் சுதந்திரச்சுடர் வீசி நிற்பதைக் காணவேண்டுமென துடியாய்த் துடித்ததற்காகத் தடியால் தாக்குண்டு உடலை உதறிச்சென்ற உத்தமத் தியாகி — வீரத்தமிழர் திருப்பூர் குமரனுக்கு இந்நூலை அன்புடன் உரிமையாக்குகிறோம்.

இராமச்சந்திரபுரம்,
15—8—47.

அன்பு வாழ்க,
நியூ இந்தியா புக் ஔஸ்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No: 105782
MADRAS

சென்னைக்கு விற்பனையுரிமை :—

முருகன் நூலகம்,
80, திருப்பள்ளித் தெரு, சென்னை-1

# பதிப்புரை

தமிழ் நாட்டின் தவமைந்தர் கவியோகி—அருண்மிகு சுத்தானந்த அடிகளார் 1945-ம் ஆண்டு வரையில் ஏராளமான அன்பருக்கு அரிய கடிதங்கள் எழுதிவந்தார். இவை ஆயிரக்கணக்கில் இருக்கும். 1932-1942 வரையில் எழுதிய கடிதங்கள் இலக்கியச்சுவையுடன் பல அரிய கேள்விகளுக்கு விடை பகிக்கின்றன—பிறகு எழுதிய பொன்னுரைக் கடிதங்கள் சுருக்க விளக்கமானவை. இப்போது சுத்தானந்தர் அரிதாகவே கடிதங்கள் எழுதுகிறார்—அவையும் மிகமிகச் சுருக்கம்.

யோகியார் கடிதங்களில் சுமார் 500 சேர்த்து வைக்கப் பெற்றுள்ளன. அவை தமிழருக்கும் உலகோருக்கும் பெரும்பயனும் நல்லுணர்ச்சியும் தருவன. அவற்றைத் தொகுதி தொகுதியாக வெளியிட நாங்கள் முன்வந்திருக்கிறோம். வீரத்தமிழருக்கு—எழுதிய இக்கடிதங்கள் பெரும்பாலும் மாணவ மாணவிகளுக்கும் பொதுநலத் தொண்டருக்கும் உரியவையாகும். இக்கடிதத் தொகுதி பெரும்பாலும் ஒய். எம். சி. ஏ. பட்டிமன்ற — விளம்பர அமைச்சர், பைந்தமிழ்ச் செல்வன் — பழம் நீ அவர்களுக்கும் — அவருடைய அருமைத் தங்கை த. ந. ஆனந்தநாயகிக்கும் சென்னை அன்பருக்கும் அவ்வப்போது எழுதியவையாகும்.

கடித இலக்கியம் தமிழுக்குப் புதிது. இளந் தமிழ்ச் சிங்கங்களுக்குச் சமய சஞ்சீவியாகக் கிடைத்த இக்கடிதங்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

அன்பு வாழ்க!

நியூ இந்தியா புக் ஹௌஸ்

# அணிந்துரை

புலவர்மணி தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்

**அடிகள்** சுத்தானந்த பாரதியாரை அறியாதார் யார்? பொதுமக்களுக்கென அவர் எழுதிய நூல்களின் திருமுழக்கம் எங்கும் கேட்கிறது; பேரொளி தமிழன் முகத்தே வீசுகிறது; புத்தின்பம் கொத்துரிமைத் திருவிழாவாக இன்று பொங்கி வழிகிறது. இது புறக்காட்சி. புறக்காட்சி கண்ட நாம் அகக்காட்சி காணவும் விரும்புவது இயல்பே. அடிகளார் அமைதியாய்க்கண்டபேரின்ப உண்மைகளை அடுத்து நிற்கும் அன்பர்களுக்குத் தம் உள்ளத்தைத் திறந்து காட்டி ஒளிப்பு மறைப்பு இன்றித் திறப்பாகப்பேசும் பேச்சுக் களையும் இந்தியத்தாய் விடுதலைபெறும் இந்த நாளில் உரிமை முரசொலியாகக் கேட்கும்பேறு பெறுகிறோம்.

கடிதங்களைத் தனிவகையான இலக்கியமாக மேனுட்டார் போற்றுகின்றனர். அந்தக் கடிதக் கலையிலும் தமிழர் முன்னணியில் நிற்கின்றனர் என்பதற்கு இந்த நூலே சிறந்த சான்ருகும். கடிதக்கலை மேலும் மேலும் வளர்ந்து தமிழன்னைக்குப் பேரழகு ஊட்டுவதாக.

தமிழன்னைக்கு இந்தப் புதுக்கலையை உடுத்தி இந்த நூல்வழியே வழிபாடுசெய்யும் அன்புப் பழத்தையும், அவருடைய அருமைத் தங்கையும் —மேரி அரிசி கல்லூரி தமிழ்ச்சங்க அமைச் சருமாகிய—செல்வி த. ந. ஆனந்தநாயகியையும் நாம் மறக்க முடியுமா?

இவர்கள் வாழ்க! இந்நூல் வாழ்க!
தமிழ் வாழ்க!

—தெ. பொ. மீ.

# முகவுரை

இந்நாள் பாரத நாட்டுக்கு ஒரு நன்னாள். வேற்றரசு இன்று வெளியேறுகின்றது. தன்னரசு வேரூன்றுகின்றது. இதுவரை வெள்ளையர் ஆட்சியில் விளைந்த தீமைகள் எல்லாம் இனி வீழ்ந்தொழிதல் வேண்டும்; பசியும் பிணியும் பகையும் இன்றிப் பாரத நாடு பண்புற்று வாழ்தல் வேண்டும். தமிழ் நாட்டாருடைய வீரமும், சீலமும் குடத்துள் வைத்த விளக்குப்போல் குன்றி ஒழியாமல் குன்றில் இட்ட ஒளி போல் நின்று நிலவுதல் வேண்டும்.

இத்தருவாயில் வீரத்தமிழருக்கு ஒரு சொல் விருந்தளிக்கின்றார், கவியோகி சுத்தானந்த பாரதியார். அப் பெரியாரை அறியாதார் அறியாதாரே! புதுவையில் இருந்து பழமை பாடுவார் அவர்; **பாட்டாலும் உரையாலும் தமிழ்த் தாயை நாள்தோறும் போற்றுவார்.** உரையாமலே உரையாடுவார். "கல்லையும் தீயையும் சேர்த்து, காற்றொடு வான வெளியையும் சேர்த்துத்" தெள்ளிய கடிதங்கள் தீட்டுவார். **அக்கடித இலக்கியம் ஆர்வத்தை ஊட்டும்; அச்சத்தை ஓட்டும்.** சுத்தானந்த அடிகளாரிடம் அளவிறந்த அன்புடைய தொண்டர் ஒருவர் சென்னையிலே வாழ்கின்றார். அவர் அறுவை வணிகர்; அருந் தமிழ்ச் செல்வர். பழநிப் பெயரினர்; பட்டி மன்றத்துப் பழநி என்பர் கிட்டிய அன்பர்கள். பண்பாடுடையவர். அவரை "அன்புப் பழம் நீ" என்று அழைத்துக் கடித வாயிலாக அடிக்கடி கட்டுரை கூறுவார் அடிகளார். அவற்றுள் நாற்பத்தைந்து கடிதங்கள் இந்நூலிலே தொகுக்கப் பெற்றுள்ளன. 'ஆவேசக் கடிதங்கள்' என்னும் பெயரால் வெளிவரும் **அடிகளின் திருமுகங்களை ஒருமுறை படித்தாலும் உள்ளம் துடிக்கும், உணர்ச்சி பிறக்கும், அன்பு வளரும்; அல்லவை தளரும்.**

"யான் பெற்ற இன்பம் பெறுக இத் தமிழகம்" என்னும் உயரிய ஆசையால் அடிகளார் கடிதங்களைத் தொகுத்து உதவிய அன்புப் பழநியார்க்கும், அழகுற அச்சிட்டு வெளியிட்ட பதிப்பகத்தார்க்கும் தமிழ் நாட்டாரது நன்றி என்றும் உரியதாகும். **தமிழ் வெல்க!**

சென்னை,
26—8—'47

**ரா. பி. சேதுப் பிள்ளை.**

# நன்றியுரை

இந்நூலுக்கு முகவுரை அளித்த "தமிழர் வீரம்" என்னும் நூலின் பேராசிரியரும், தமிழுருவாகிய தலைவரும் ஆகிய திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கட்கும், அணிந்துரை தந்துதவிய தமிழ்ப்பெரியார். தெ. போ. மீனாட்சி சுந்தரனாருக்கும், யோகியாரின் பொன்னுரைக் கடிதங்களைத் தந்துதவிய அன்புப் பழம்நீ அவர்கட்கும், அவருடைய அருமைத்தங்கை, த. ந. ஆனந்தநாயகி அவர்கட்கும், இந்நூல் வனப்புற வெளிவருதற்கு ஆக வேண்டிய தொண்டுகளை மனஞ்சலியாது நிறைவேற்றிய அருட்சோதி அடியார் மா. இராஜமாணிக்கம் அவர்கட்கும் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டது.

மற்றும் உதவிபுரிந்த அன்பர்களான க. மு. துரைசாமி, G. செல்வரங்கம், ஓடும்பிள்ளை து. இராமலிங்கனாருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியது.

இந்நூலை வீரத்தமிழரிடையே மிகவிரைவில் பரப்ப முன்வந்திருக்கும் சென்னை—சுவாமி சுத்தானந்த பாரதியார் கழகத்துக்கும், சென்னைக் கல்லூரி மாணவ மாணவிகளான திருமதி. S. விஜயலட்சுமி, திருமதி. வஸந்தா, திருவாளர்கள்—பரமகுரு M.A., லிங்கராஜ், பா. சோமசுந்தரனார் முதலியோருக்கும் மற்றுமுள்ள வீராங்கனைகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

உரிமையாளர்,

நியூ இந்தியா புக் ஹௌஸ்.

# உள்ளுறை


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| | அன்பு மாலை | |
| | பதிப்புரை | |
| | துணிந்துரை (தெ. பொ. மீ.) | |
| | முகவுரை (ரா. பி. சேதுப் பிள்ளை) | |
| | நன்றியுரை | |
| | உள்ளுறை | |
| | வீறுபெற்று நில்லடா | |
| | கவனம் | |
| | பாப்பா | |
| 1 | என் மனத்துடிப்பு! .... .... | 1 |
| 2 | என் உள்ளம்! .... ... | 2 |
| 3 | ஒற்றுமைக்கு வழி .... ... | 4 |
| 4 | மனிதனுள் எரிமலை .... .... | 6 |
| 5 | இடமறிந்திரு .... .... | 9 |
| 6 | செய்க பொருளை! ... ... | 10 |
| 7 | நமது சமயம் .... ... | 13 |
| 8 | வடக்கும் தெற்கும் ... .... | 16 |
| 9 | தமிழர் வரலாறு ... .... | 18 |
| 10 | தமிழுணர்ச்சி .... .... | 20 |
| 11 | தமிழ் நடை ... ... | 21 |
| 12 | தமிழ்க்கழகம் .... ... | 26 |
| 13 | கம்பன் ... .... | 27 |
| 14 | கம்பரும் சேக்கிழாரும் .... .... | 28 |
| 15 | இளந்தொண்டர் .... .... | 30 |
| 16 | பாரதசக்தி .... .... | 31 |
| 17 | ஆத்மசக்தி .... .... | 31 |
| 18 | மகாத்மா .... .... | 33 |

19 ஹிந்துஸ்தானி .... .... 34
20 பாரதியார் .... .... 36
21 மீசை முறுக்கடா! .... .... 37
22 வாழ்வு .... .... 37
23 ஒளியும் ஒழுக்கமும் .... .... 39
24 சாதி இறுமாப்பு .... .... 41
25 நோய் .... .... 42
26 பைத்தியம் .... .... 43
27 இளமை .... .... 45
28 கூற்றிற்கஞ்சேல் ... .... 45
29 புதுமை ... .... 46
30 நாடகக்கலை .... .... 48
31 நடித்தல் .... .... 49
32 நகைச்சுவை .... .... 51
33 மணப்பெண் .... .... 52
34 திருமண வாழ்த்து .... .... 53
35 புதுமைப் பெண் .... .... 57
36 புது இந்தியாவில் முழுத் தமிழர் .... 58
37 பட்டி மன்றம் .... ... 60
38 மனைவி .... .... 62
39 உடல் .... .... 63
40 அருங்கலை .... .... 64
41 யாப்பு .... .... 66
42 வேலும் வில்லும் .... .... 68
43 நான் அரவிந்தாசிரமத்தில் இருப்பதேன்? 69
44 மௌனம் .... ... 73

# வீறு பெற்று நில்லடா!!

வீறு பெற்று நில்லடா!
விதியை மீறிச் செல்லடா!
ஊறும் வீர சக்தியால்
உலகை முற்றும் வெல்லடா!
உச்ச மான வானிலே
உலாவுங் காற்றை மானவே
அச்சமற் றுலாவுவோம்
அமுத வெண் ணிலாவிலே!
பனிமலர் ததுங் கிடும்
பவளக் காலை போலவே
கனி முறுவல் பூத்துநம்
கடமை செய்ய முந்துவோம்
திரு உடன் உலகெலாம்
செழித் திடப் பவனிசெல்
பருவ காலம் போலவே
பயன் பழுக்க வாழுவோம்!
பண் மலர்கள் சூட்டியே
பரமனைக் கலந்து நாம்
கண்மலரி லே மனக்
கருணை பொங்க வாழுவோம்.

சுத்தானந்தபாரதி

# கவனம்.

அன்புக் கண்மணி,

உடம்பு கவனம்; துறுதுறுக்காதே; பரபரக்காதே; நிதானமாகப் பார்த்து நட. கல்முள் பார்த்து நட; நாகரிக வுலகில் கண்ணாடிச் சில்லிகளும், ஆணிகளும் சிதறிக்கிடக்கும்—கவனமாக நட. கண்ணைக் கண்ட கண்ணிகளில் வீசாதே; பெண்களை உற்றுப் பாராதே, அவர்கள் புன்னகைக்கு ஏங்கி வாடாதே; **உள்ளே பார்; உன்னைப் பார்;** உன் மனச்சாட்சியை மதித்து நட.

சமதை — அமைதி இரண்டும் வாழ்வுக்கு வெற்றிதரும்.

சிந்தையடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி,
விந்தை யடக்கி வளர் வீறு.

அன்பு
சுத்தானந்த பாரதி

# குழந்தை உமாதேவிக்கு

பாப்பாவுக்கு

**அன்பு! அன்பு!! நலமோங்குக.**

பாப்பா நீ ஒரு சின்ன உலகம். அந்த உலகத்தில் அன்பு பூத்து கமகம என்று மணக்கிறது. அந்த அன்பு யார் யாருக்கு இருக்கிறதோ அவர்களெல்லோரும் பாப்பா. நான் பாப்பா....தாடி மீசை முளைத்த பாப்பா.......எனக்கு உன் மனதைத்தா.......உன் மாசற்ற அன்பைத் தா....பாப்பா நீயே என் கடவுள். உன்னைப் போல உலகமெல்லாம் வஞ்சமற்றிருந்தால் சண்டையேயில்லை வயதாக ஆகச் சூது, வாது, பொறமை ஆளை வேதனை செய்கின்றன. எனக்கு வரவரக் குழந்தையாய்விட வேண்டுமென்றே ஆசை:

மான் போலத் துள்ளும் குழந்தை,
மலர் போலச் சிரிக்கும் குழந்தை
தேன் போலப் பேசும் குழந்தை—என்
தெய்வ வடிவான குழந்தை.

**அன்புப் பாப்பா வாழ்க,**

**சுத்தானந்தம்**

**பாப்பாவுக்கு :—**

கொஞ்சுங் குழந்தைகளைக் கண்டால்—உச்சி
குளிர்ந்து, மகிழ்ந்தணைத்துக் கொள்ளுவேன்
பிஞ்சுத் தளிர்க்கரத்தைக் கண்ணில்—ஒற்றிப்
பிரியமாய்ப் பட்சணங்கள் கொடுப்பேன்.
**குஞ்சுக் குழந்தைகளைக் கண்டால்—ஒரு,**
**குட்டி யுலகமென மதிப்பேன்!**—அவர்
வஞ்சமில் லாதமனந் தன்னில் —என்
வாழ்க்கையின் வாசகத்தைப் படிப்பேன்!''

**குழந்தை இன்பம்**


43883

# வீரத் தமிழருக்கு!



சுவாமி சுத்தானந்த பாரதியார்

எல்லா வுலகிற்கும் இறைவன் ஒருவ ர்
எல்லா வுடலு மிறைவன் ஆலயமே



நாடகபூஷணி - பரமதத்த M.A.,



புன்னகை தவழும் - பழம் நீ



ஆடும்பாடும் - ஆனந்தி



கொஞ்சும் பதுமை - உமாதேவி

# 1. என் மனத்துடிப்பு

புதுச்சேரி,
5-4-'44.

அன்புப் பழம் நீ,

என் மனம் துடிக்கிறது — தமிழர் நிலையைக் கண்டு படபடக்கிறது. தமிழர் உலகின் தொல்குடி மக்கள். தமிழ் உலகின் முன்மொழி. வேறெந்த மொழிக்கும் இல்லாத அழகும், இனிமையும், அள்ள அள்ளக் கொடுக்கும் வண்மையும் தமிழுக்கு உண்டு. தமிழர் தமிழைப் புறக்கணித்தார்கள். உலகமே தமிழரைப் புறக்கணித்தது. தமிழர் மரபிற்குரிய வீரத்தை மறந்தார்கள். உலகம் தமிழர் என்றால், நெத்தாலிலும் கண்டியிலும் வேலைசெய்யும் கூலிகளாகவே கருதுகிறது. தமிழன் என்றால், கலையரசன், கம்பர்நாட்டான், வள்ளுவர் மரபினன், அப்பரின் வழித்தோன்றல் என்பதை இனி உலகம் ஒப்பி மதிக்கவேண்டும். இன்று ஆங்கிலத்திற்கும் இந்துஸ்தானிக்கும் எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு தமிழுக்கும் உண்டாகவேண்டும். தமிழர் கூட்டம் உலகப் புகழ் பெறும் வீரர் கூட்டமாய், அறிவுச் செல்வர் கூட்டமாய், கலைமணிகளின் கூட்டமாய் ஓங்கி வளம்பெறவேண்டும். இதுதான் என் மனத்துடிப்பு.

இந்தத் துடிப்பு நின் மனதிலும் துடிக்கட்டும். உன்னைப்போன்ற இளந்தமிழர் உள்ளத்திலும் துடிக்கட்டும். இலண்டன் பேச்சை நமது வீட்டு வானொலிப்பெட்டியிற் கேட்கிறோம். இங்கே பேசுவதை நியூயார்க்கில் கேட்கின்றனர். எப்படி வானிலுள்ள நுண்ணணுக்களில் ஒலியானது சுழன்று சென்று உலகெல்லாம் பரவுகிறது. அதுபோலவே என் மனத்துடிப்பு, மோனக்குகையிலிருந்து, மனத்திற்கு மனம் தாவி, தமிழர் உள்ளமெல்லாம் துடிக்கட்டும், உன் உள்ளத்தில் துடிக்கட்டும். உனது

நண்பர் மனதில் துடிக்கட்டும். எல்லார் மனமும் ஒரே தமிழ்த்துடிப்பாகி மின்சாரவேகத்தில் உணர்ச்சி அலைகளைப் பரப்புக. உணர்ச்சி, தமிழ் உணர்ச்சி, ஒற்றுமையுணர்ச்சி எங்கும் எலெக்ட்ரன் அணுக்கள் போலப் பரவுக. அன்புத் தமிழா, நிமிர்ந்து நில். உன் பார்வையால் பகைவர் நடுங்கச்செய். அன்பர் மகிழச்செய். உன் உரிமையை விட்டுக்கொடுக்காதே. உன் பெருமையை மறக்காதே. தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தன்னுதவி, தன்னறிவு, தற்காப்பு—இந்த ஐந்தும் தமிழர் வாழ்விற்கு ஐம்பொறிகள் போலாகும்...தமிழர் சங்ககால வீரர்போல் உலகை வென்று விளங்குக.... என்று நினை; இரவும் பகலும் நினை....மனமே மனிதன், நினைப்பே நடப்பு, நினைப்பே சொல், செயல் அனைத்தும். நினைப்பின்உருவே நிலவுலகம்.... நன்னினைவு வளர்க எந்தாய் வாழ்க!

அன்பு. அன்பு. அன்பு.
**சுத்தானந்த பாரதி**

---

வீரத்தமிழருக்கு:

# 2. என் உள்ளம்!

**இளந்தமிழர்காள்,**

என் உள்ளம் உங்களுக்காகத் துடிக்கிறது! என் அன்பு உங்களை அழைக்கிறது! என் ஆர்வம் உங்கள் நன்மையை அவாவுகிறது; என் கவிக் கனவு உங்களுக்கு வெற்றி முடி சூட்டுகிறது. இளந்தமிழர்காள்! தமிழன்னையின் முரசொலியைக் கேளுங்கள்! இரும்புத் தசைகளைத் திருகிவிட்டு, மீசையை முறுக்கிவிட்டுப் போர் முனைக்கு வாருங்கள்! அதோ பகைப்படைகள் அட்டூழியம் செய்கின்றன; தாயின் தலை மாட்டிலும் கால்மாட்டிலும் இப்புறமும், அப்புறமும் பகைப்படைகள் சூழ்ந்து கொக்கரிக்கின்றன—வகுப்புவாத வம்புப்படை; பொறாமைப் படை, ஆணவத்திமிர் பிடித்த சுய நலப்படை, துரோகக் கும்பல்; உண்ட வீட்டை இரண்டகம் செய்யும் வஞ்ச

நரிப்படை, பிரிவினைப்படை, நமது தாயின் இரத்தத்தை உறிஞ்சும் அசுரப்படை, அன்னியமோகப்படை, கோள் சொல்லிக்குடியைக் கெடுக்கும் குண்டுணிப்படை—எல்லாம் வந்து மோதுகின்றன. தமிழ் வீரர்களே, அற வாள் பிடித்து, மனத்திட்பமெனும் வேலேந்தி வாருங்கள். வாளும் வேலும் மட்டும் போதா—பரமாணு வெடியைவிட வலியதான பரமாத்ம சக்தியைப் பெறுங்கள். ஒற்றுமை என்ற சமயசஞ்சீவியை அணிந்து வாருங்கள். வெற்றி உறுதி!

இளைஞர்காள், காலத்திற்கேற்ற கல்வியை நிரம்பப் பெறுங்கள். தமிழ்-ஹிந்துஸ்தானி, ஆங்கிலம்—இம் மூன்றிலும் சொல்வளம் பெறுங்கள்; வீடும், நாடும் உலகும் மதிக்கும் வீறு பெற்ற புலவர் மணிகளாய், வீரசிகா மணிகளாய் விளங்குங்கள்.

பதினெட்டாண்டு வரையில் கலைப்பயிற்சி, பிறகு தொழிற்பயிற்சி பிறகு போர்ப்பயிற்சி பெறுங்கள். அறவோர் உங்களை வாழ்த்தவேண்டும். மறவலியரக்கர் உங்கள் வீரவேல் விழிகளைக்கண்டு நடுங்கிப்பணிய வேண்டும்; நல்லோர் உங்களை நாடவேண்டும்; பொல்லோர் அஞ்சி ஓடவேண்டும்.

இளைஞர்காள், புதிய தமிழுலகை ஆக்குவோம்; உலகம் வியக்கும் புதிய தமிழக வரலாற்றைக் கோப்போம். ஆற்றல், ஆண்மை, அஞ்சாநெஞ்சம், அருள், அறிவு, ஆன்மநேய ஒருமை இந்த ஆறும் உங்களை அணி செய்க. இவையே இன்பவாழ்வின் ஆறுமுகங்கள்—உலகு மதிக்கும் ஒப்பற்ற அதிமனிதராக விளங்குங்கள்.—அருமைத் தமிழ்ச் சிங்கங்காள்! என் அன்புத் தெய்வங்காள்—நீடு வாழ்ந்து நிகரில்லாத் தொண்டு செய்து பீடுயர் புகழோங்கி வாழ்ந்திருங்கள்!

உங்கள் அன்பன்

சுத்தானந்த பாரதி

# 3. ஒற்றுமைக்கு வழி

அன்புமணியே,

ஒற்றுமைக்கு வழி கேட்கிறாய். சொல்லால் ஒற்றுமை வருவதானால் நமது மேடைப்பிரசங்கமும் அச்சுத்தாட்களும் அந்த அற்புதத்தைச் செய்திருக்கலாம். ஆனால் அச்சும் மேடையும் பிரிவினைகளையும் வகுப்பு வாதங்களையுமே பெருக்கின.

மனிதன் மனிதனை மனிதனாக, தன்னிகர் ஆன்மாவாக என்று கருதி மதிக்கிறானோ அன்றுதான் ஒற்றுமை இயலும். நான் பார்ப்பான், நீ நாயுடு, அவன் முதலியார், உவன் சாகெபு, இன்னொருவன் வேறுமதம் வேறுசாதி என்று வகுத்துப் பார்க்குமட்டும் மனவொருமையோ இனவொருமையோ உண்டாகமுடியாது. நாம் கலந்துண்டாலும் கலந்து மணந்தாலும் சரி, ஒற்றுமை உள்ளிருந்து வராது.

ஒரு மன்றத்தில் பல வகுப்பினர் கூடியிருந்து ஒரு பிரசங்கம் கேட்கின்றனர். அப்போது வருணபேதம் தோன்றுவதில்லை. ஏன்? எல்லார் உள்ளமும் ஒரு குறிப்பான பொருளில் லயித்துள்ளது. அதேபோல் மனிதமனம் உள்ளான்மாவில் லயித்துப்போனால் வேறுபாட்டிற்கே இடமிராது.

படிப்படியாக உணர்ச்சி விரிவாகவேண்டும். ஒரு பூவில் இதழ்கள் கூடியிருந்து அழகும் மணமும் பொலிவதுபோல் எல்லா உள்ளங்களும் சுத்தான்ம உணர்வில் கூடினாலே வாழ்க்கைமலர் அழகும் அருள்மணமும் வீசும்.

முதலில் ஐயர், ஐயங்கார், ராயர், முதலியார், பிள்ளை, நாயுடு, சாகெபு என்ற பேதங்களை ஒழி! மற! நான் தமிழன் என்ற இன உணர்ச்சிகொள். அந்தணரைக் கண்டால் 'வாரும் ஐயரே' என்னாதே 'வாரும் தமிழரே' என்று அழை. ஒரு இஸ்லாமியரைக்கண்டால் 'வாரும் சாகெபு' என்னாதே 'வாரும் தமிழரே' என்றுசொல்.

இந்தத்தமிழுணர்ச்சியில் தமிழகம் ஒன்றுபட வேண்டும். தமிழகத்தில் அக்கிரகாரமும் கூடாது, சேரியும் கூடாது. யாரும் எங்கும் வசிக்க உரிமை வேண்டும். அவரவர் தொழிலுக்கேற்ற இடத்தில் உரிமையுடன் இருக்கச் சுயேச்சை வேண்டும்.

இரண்டாவது படி: நான் தமிழன் நீ ஆந்திரன், அவன் கன்னடன் உவன் மலையாளத்தான் என்ற வேறுபாடு ஒழிந்து எல்லாரும் தென்மக்கள் என்ற கூட்ட உணர்ச்சி வளர வேண்டும்.

மூன்றாவது படி: நான் திராவிடன், அவன் ஆரியன், இவன் வங்காளி இன்னொருவன் குசராதி என்று மாகாணப்பிரிவுக்கப்பால் தாண்டிச்சென்று, நாம் அனைவரும் இந்தியர் நம் நாடிநாளங்களில் ஓடுவது இந்தியரத்தம் என்ற நாட்டுணர்ச்சி வளரவேண்டும். அதுவந்தால் நவகாளிப்படுகொலைக்கோ அமிர்தசரஸ் படுநாசத்திற்கோ இடமிராது. வடக்கே நடக்கும் மதவெறிக் கொலைகளுக்கும் தெற்கே நடக்கும் வகுப்புச்சண்டைகளுக்கும் காரணம் என்ன? சுயநலப்பிரிவினையுணர்ச்சி தான்.

நான்காம்படி: நான் இந்தியன் அவன் சீனன் இன்னொருவன் ஆங்கிலன், அமெரிக்கன் என்ற பேதமும் ஒழிந்து நாமெல்லாம் **மனிதசமுதாயம்**, உலகப்புதல்வர் என்ற உலகுணர்ச்சியுண்டாகவேண்டும். உண்டானால் ஹிட்லருக்கோ ஸ்டாலினுக்கோ சர்ச்சிலுக்கோ இடமில்லை. நாடுகளெல்லாம் ஒரே உலகுணர்வுடன் வாழலாம்.

ஐந்தாம்படி: நான் இந்து அவன் கிறிஸ்துவன், உவன் முகம்மதியன், இன்னொருவன் பார்ஸி என்ற பேதமில்லாமல் நான் எந்த ஆன்மாவோ அதுவே அவனும் என்ற ஆன்மநேயத்துடன் வாழவேண்டும். இது தான் **ஆன்மநேய** ஒருமை. இதை உலகிற்குத்தந்தவர் **செந்தமிழ் வள்ளலார்.** உலக ஒற்றுமைக்கு வழிகாட்

டியவருள் மிகப்பெரியார் வள்ளலார். அருட்பா உணர்ச்சியில் வாழ்ந்தால், உலகெல்லாம் சுத்தசன்மார்க்க ஒருமையில் ஒரே குலமாக வாழலாம். அருளாட்சிகாணலாம்.

என்மனம் இந்த அருளொருமையைக் காணத் துடிக்கிறது.

## 4. மனிதனுள் எரிமலை

**அன்புக்கனியே,**

உலகில் வேற்றுமைக் கொலைகளைக்கண்டு என்மனம் தீப்பட்ட புழுப்போலத் துடிக்கிறது. ஒரே கடவுள், ஒரே சுத்தான்மா, ஒரே விண்ணின் கீழ் ஒரே உலகம், ஒரே மனிதசமுதாயம் என்றுணராமல், நான் நீ அவன்எனக்கு உனக்கு என்று அகங்கரிக்குமட்டும், உலகநிலை கலகநிலை தான். ஒரு மரத்தில் உள்ள ஒவ்வொரு இதழும் பூவும், இலையும் கிளையும் மரமே. உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மனிதசமுதாயமே. இந்த விரிவான உணர்வில்லாமல், சிறுபிள்ளைத்தனமாக நாம் அரசியல் மேடையைப் போர்க்களமாக்கிக் கொண்டிருக்கிறோம். கைகால் தலை வயிறு எல்லாம் ஒரே உடலே, உடலெல்லாம் ஓரான். மக்குடிலே என்றுணரவேண்டும்.

இவ்வுணர்ச்சியில்லாமல் மனவிகாரங்கொண்டுபார்த்தால், அண்ணன் தம்பிகள் கூட ஒத்துவரமுடியாது.

மனிதனிடம் வீரியத்தினவுகள் பலமாயிருக்கின்றன. அத்தினவுதான் மனிதனை அரக்கனாக்குகிறது. ஹிட்லரும் முஸ்ஸோவும் வீரியத்தினவுப்பண்டங்களே. ஒவ்வொருவருள்ளும் அந்த அரக்கன் இருந்து எரிமலைபோலக்கிளம்புகிறான். என்வாழ்க்கையில் ஆயிரம் எரிமலைகளைப் பார்த்திருக்கிறேன். உள்ளமைதியால் தீம்பிழம்பு என்னைச் சுடாது காத்துக்கொண்டிருக்கிறேன். பணத்தையும் நூல்களையுங்கொண்டு ஏராளமானபேரைப்பதம் பார்த்தாயிற்று. என்னைத் தங்களுக்கே பங்குபோட்டுக்

கொண்டு பணமும்புகழும் தேடமுயன்றவர்பலர். எனக்கே தரவேண்டும் பிறருக்குத்தரக்கூடாது. ஹா அவனுடன் பேசினாய் இவனுடன் பேசினாய் என்று என்னைப் பெண் சாதிபோல் அதிகாரம்செய்து ஆத்திரம்கொண்டு இழிவாகத் தூற்றினவரும் உண்டு. முன்கோபப் புலிகள் எத்தனையோ மேலே விழுந்தன. பல ஆண்டுகள் சோதனை நடத்தி, ஒவ்வொருவர் குணத்தை அறியவேண்டியிருக்கிறது. சோதனைமுடிந்த பிறகு "கடவுளே என்னை இந்த முரட்டு அநாகரிகப் புலிக்கூட்டத்திலிருந்து காத்தாயே....என்பொருள் நட்டமானாலும் பரவாயில்லை" என்று விலகி யோகத்தில் ஆழ்ந்த சந்தர்ப்பங்கள் பல....என்வாழ்வெல்லாம் ஆத்மசோதனைதான். அச்சோதனையில் ஏதோ பத்துப்பதினைந்து நல்ல அன்பர்களைக் கண்டிருக்கிறேன்.

மனித இயல்பு பண்படவேண்டும். புசுக்கென்று முன்கோபம்ஆத்திரப் படபடப்பால் கண்டபடி வார்த்தை வீசுதல், பிறரை அடிமைப்படுத்தல், நான்சொன்னபடி நீ நடக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்படிச் செய்வேன் இப்படிச்செய்வேன் என்று மிரட்டுதல். எனக்கே உன் பொருளையும் உழைப்பையும் தரவேண்டும், வேறு யாரையும் பார்த்தாயோ உன்னைச் சுட்டுவிடுவேன் என்று மிரட்டல்....இப்படிப்பட்ட கொடுங்கோல் சின்னங்களை அடியோடொழித்தாலன்றி மனிதன் உருப்படியாக முடியாது. வீரியத்தினவு இன்று என்மேல், நாளை உன் மேல் மறுநாள் அவன்மேல் பாயும். உலகமே பகைக்காடாகும். வீரியத்தினவுகளை அடக்காதவன் மிருகம். பேராசை, பொறாமை, ஆத்திரம் துரகங்காரம், சாதி இறுமாப்பு, சமயவெறி, எல்லாம் வீரியத்தினவுகளே. பசிகொண்டு பசுவின்மேல்பாய்ந்து கிழிக்கும் வேங்கைப் புலியைவிட, ஆத்திரப் பொறாமைகொண்டு குற்றமில்லாதவர்கள்மேல் பாய்ந்துபிடுங்கும் மனிதன் படுமோசம்.

ஆதலால் வாழ்க்கையில் அமைதிகாணவேண்டுமானால் முன்கோபத்தையும் பேதபுத்தியையும், சுயநலப்பொறாமை

களையும் அடக்கவேண்டும். உன்னிடம் இருப்பதை தேவையானவர்களுக்குக் கொடுத்துப்பழகு. இதையே வள்ளுவர் **பாத்தூண்** என்கிறார்....தனக்கு தனக்கு என்னுமல், பிறர்க்கு, ஆன்மத்தொகுதிக்கு, இறைவனுக்கு என்ற உணர்ச்சியுடன் வாழ்ந்தால் வீரியத்தினவுகள் அடங்கும்.

வீரியகோசமே அகரநிலையம். அதைவென்றுலே மனிதன் குணவானுகலாம். இன்றேல் வீரியத்தினவு அவனைச்சள்ளையில் மாட்டிக் கொன்று நரகக்குழியில் தள்ளும். மட்டுக்கு மிஞ்சிய காமவினையால் வம்புபழுத்து, உடல் நோய்ப்பிண்டமாவதுபோலவே மட்டுக்குமிஞ்சிய ஆத்திரப்பொறுமைகளால், மனம் அழுகி வாழ்க்கை கவலைநரகமாகும். கோபத்தால் உன்சக்தி வீணுகும், பாழாகும். யார்மேலும் ஆத்திரப்படாதே. பிறர் நன்ருக வாழ்ந்தால் பொறுமைப்படாதே. பிறர் நலம்கண்டு மகிழ். சாதுக்களை மதி இதுதான் ஆரம்பசாதனம்.... பழகு, பழகு....

**தோழர் :—**

உலகோர் உறவெல்லாம் சுயநலமே. நம்மிடம் பசை இருக்குமட்டும் ஆஹா உன்னைப்போலுண்டா-என்பர்; தோளில் கைபோட்டுக் கட்டித்தழுவுவர்; முத்தமிட்டுக் கொஞ்சுவர். பாடுவர், ஆடுவர், பரவசமாகப் பேசுவர். முடிப்பாகத் தட்டிக்கொண்டு மூட்டையைக் கிளப்புவர். பணம் பட்டம் பதவி அதிகாரம்—இவைகளை ஈ மொய்ப்பதுபோல மனிதர் மொய்க்கிறார்கள். ஆனல் எல்லாம் மல ஈக்கள்—ஆசை யாவை? மலத்தில்உழலும் ஈக்கள்—ஆசை இங்கே தீர்ந்தால் இன்னோரிடம் ஓடித் தமது சுரண்டலை நடத்தும் பேர்வழிகளே உலகில் அதிகம். ஆதலால் தோளில் கைபோடும் தோழரிடம் உஷார்—முடிப்பு கவனம்!

அன்பு,
**சுத்தானந்தம்.**

# 5. இடமறிந்திரு

**அன்புப் பழநி,**

இந்த அக்கப்போர்களெல்லாம் மனிதனிடம் மனப்பு தரில் ஒளிந்த பேய்களால் வருவன. அந்தக்கரண சுத்தி யில்லை. உள்ளன்பில்லை. சுயநலநரியும் அகம்பாவப் புலியும் பொறாமைப் பாம்பும் மனப்புதரிலிருந்து பாய்ந்து, சீறிச் சினந்து நஞ்சுகக்கி இடர்செய்கின்றன. மனிதன் மனிதனை ஆன்ம ஒருமையால் கண்டால், சாதிமதம், வகுப்புவாதம் நாடு நிற வேறுபாடுகள் இரா. மனிதன் மனிதனை அகம்பாவப்பொறாமையால் பார்க்கிறான். சுய நலத்தால் அளக்கிறான். தான் தனது தனக்கு என்ற உணர்ச்சியால் ஊரை வளைக்கப் பார்க்கிறான். நல்லது பொல்லது அறியாமல் தன்சாதி, தன்மதம், தன்பிள்ளை குட்டிகளுக்கே ஆக்கம் தேடிப் பிறருக்குத் தீமை செய் கிறான். ஹிட்லர் ரஷ்யாவைப் படையெடுத்ததுபோலத் தான் தனிவாழ்விலும் ஒருவனை ஒருவன் கெடுக்கப் பார்க்கி றான். இதுதான் வீட்டுப்போர் தெருப்போர் நாட்டுப் போர் உலகப்போர் ஆகிய எல்லாப் போர்களுக்கும் காரணம்.

ஒருகடிகாரத்தின் முள் அதனிடம், வில் அதனிடம், பல்வட்டங்கள் அததனிடம் இருந்து சாவி கொடுத்துவிட் டால், அமைதியாக ஓடும். வில்லின் இடத்தில் முள் புகுந் தால், சாவி கொடுத்தாலும் கடிகாரம் ஓடாது.

சமுதாய வாழ்விலும் அவரவர்,அவரவர் இடந்தெரிந்து அந்த இடத்தி லிருந்தே பொதுநல உணர்ச்சியுடன் வாழ்ந்தால் போரே யிராது.

இயற்கையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் இயல்பும் புலமையும் இடமும் ஏற்பட்டிருக்கும். இயற்கை யிறைவன் எனக்கு ஏற்படுத்திய இடம் யோகநிலை; எனக் கீந்த பணி அந்நிலையில் உதித்ததைச் சொல்லோவிய மாக்கி

உலகிற்கு உதவுதல். இந்தப் பணியே சரியானபடி நடந்து என் பாட்டெல்லாம் உயிர்க்குலமான இறைவனுக்கே வழிபாடானால் போதும். நான் அமைதியாக வாழலாம். இறைவன் கட்டளையும் செய்யலாம். இதைவிட்டு நான் வாள்பிடித்து வாடாசண்டைக்கு என்று உலகுடன் போர் புரியத்தொடங்கினால், அல்லது தெருக்கூச்சல்களில் என் சக்தியை வீணாக்கினால், அது இயற்கைக்குப்பகை, திருவருள் ஆணைக்கு எதிர், அமைதிக்கு விரோதம் ஆகும். எனக்கு ஒவ்வாததைச் செய்து ஐயா அமைதி கெட்டதே, தெய்வம் துணைசெய்யவில்லையே எல்லாரும்திட்டுகிறார்களே என்றால், அது என் வினையால் வந்த விளைவே; என்னை நான் தெரிந்துகொள்ளவேண்டும். அன்பனே இடமறிந் திரு. உனக்கேற்ற தொழிலை உள்ளூன்றிச் செய். மனச் சாட்சி மகிழ நட. வேறு யாருக்கும் அஞ்சவேண்டிய தில்லை. உலகின் இசைவசைகளால் அமைதி குலையாதே. . . . . பொறுமையாக அடக்கமாக இடந்தெரிந்திருந்து, தொழிலறிந்துசெய்....எல்லாம் முடிவில் நன்றாகும்.

## 6. செய்க பொருளை !

அன்பனே,

இந்த வயதில் நீ சுறுசுறுப்பாகத் தொழில் செய்ய வேண்டும். குலத்தொழில் நலத்தொழில்; அதை விடாதே. உண்ண உடுக்க எப்போதும் உலகில் தேவையிருக்கும். பிறரை எதிர்பாராமல் தொழில்செய்து உண்பதில் தனியின்ப முண்டு. அந்த இன்பத்தையே இன்றும்நான் நுகர்கிறேன். என் பேனாவால் வந்ததைக் கொண்டுதான் நான் இன்றும் வாழ்கிறேன். சிலசமயம் எனது தேவை களுக்காகவும் நான் விரும்பிய அறவினைகளுக்காகவும், நூல்களை அச்சிடும் செலவுகளுக்காகவும் மாதக்கணக்காக இரவுபகலாகப் பேனா ஓட்டியதுண்டு. சிலநாட்கள் பட்டினி யிருந்தும் எடுத்த நூலை முடிப்பதுண்டு. ஜினனந்தம் பத்து

நாள் பட்டினியிருந்து யாத்தது. யோகசித்தி விரிவுரையின் போது பத்து நாட்கள் பட்டினி. பத்து நாட்கள் பால் மட்டும். இப்படிச் சிரமப்பட்டு எழுதியும் நான் பொருள் நட்டப்பட்டு வசவும் சுமந்ததுண்டு. சிலசமயம் எழுத்தால் என் தேவைகளைப் பெற்றதுண்டு. எழுதியெழுதி ஜன்ன லில் வைத்ததும் அன்பர் வெளியிட்டு எனக்கு ஐந்து புத்தகங்களும் கொஞ்சம் கனிகளும் நிவேதனம்செய்து விட்டு அத்துடன் கணக்கை மறப்பதும் உண்டு. நூல்க ளுக்கு ஏதோ சிறுதொகை தருவோரும் அரிதாக உண்டு. பணம் வந்தால் உடனே ஆசிரமத்திற்கும் நூல் வெளியீட் டிற்கும் செல்லும். இப்படித் தொழிலால் நான் வாழ்கி றேன். எவரிடமும் சும்மா நான் எதையும் பெற்றதில்லை. நூல்கள் வெளியிடுவோர் கனி கடலை தந்தால் நூலுக்குப் பிரதி என்று பெற்றுக்கொள்வது வழக்கம். அவ்வளவு தான்.

உலகில் ஓசியும் பிச்சையும் ஒழிக. கடவுள் கொடுத்த மூளையும் கையும் உள்ளமட்டும் தொழில் செய்துண்க. செய் தொழில். தொழிலில் வந்ததைக்கொண்டுவீட்டிற்கும் நாட்டிற்கும் உதவு.

பணம் ஒரு சக்தி. செய்க பொருளை என்று வள்ளுவர் கட்டளையிடுகிறார். பொருள் வேண்டும். எதற்கு? வைத்துப் பூட்ட அன்று; ஏழைகளை மிரட்ட அன்று; இடம்பக் கூத்தடிக்க அன்று. அறஞ்செய்யவே. பொருள் வேண்டும். அதனாலேதான் அறத்திற்குப் பிறகு பொருள் சொல்லப்பட்டது. பொருள் இருந்தாலே இந்த உலக வாழ்க்கை இயலும். பண்டாரசந்நிதிகள் சங்கரர் போன்ற துறவிகளும் பொருள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இராமகிருஷ்ண விவேகானந்தர் பெயராலும் இன்று பொருள் ஏராளமான நன்மைகளைச் செய்துவருகிறது. பொருளைப் பொது நலமாக்கவேண்டியது துறவியின் கடமை. பொருளைத் தொழிலாக்கிப் பலருக்கும் உழைப் பும் பிழைப்பும் உண்டாக்கவேண்டியது இல்லறத்தான் கடமையாகும். பொருளைப் பூட்டிவைக்கக்கூடாது.

திருவை இரும்புப்பெட்டியில் சிறையிடக்கூடாது. பொருளைப்பொருளாக்கிப் பண்டமாக்கிப் பயனுக்கி உலகிற்கு நலமாக்கவேண்டும். பொருளாட்சி அரிய திறமையாகும். பணம் வந்ததும் கண் தலை தெரியாமல் நடத்தலும், தாம் தூம் என்று வாரியிறைத்தலும், தீயசெயல்களுக்குப் பயன்படுத்துவதும் மிகக் கொடுமையாகும். பொருட் சிக்கனமும் தெரியவேண்டும். இடம் பார்த்து உதவவேண்டும். நாட்டில் அறிவும் தொழிலும் சன்மார்க்கசாதனமும், ஒற்றுமையும் நாகரிகமும் சமுதாய முன்னேற்றமும் பரவ ஏராளமாக தாராளமாகப் பொருளைச் செலவிடலாம்.

நமது நாட்டில் பெண் மாயம், பொருள் பாபம், மண் துயரம் என்ற பொய்க்கொள்கைகள் பரவி வாழ்க்கையைப் பொய்க்கனவு என்று மறுக்கத் துணிந்தன. அறம் பொருள் இன்பத்திறமையை நாடு இழந்தது. துறவிகளெல்லாம் ஒருவேலையும் செய்யாமல் ஊர்ச்சோற்றை உண்டுறங்கும் வேதாந்தச் சோம்பேறிகளானூர்கள். பலர் உலகவெறுப்பும் பொருள் வெறுப்பும் கொண்டு, வாழ்வில் ஊக்கமில்லாமல் பாழ்பட்டனர். நமது நாட்டில் சோம்பலையும் மடமை யிருளையும் பரலோக மோகத்தையும், பிரிவினைகளையும் பயன்படுத்தி, அன்னியர் இங்கே ஊன்றிக் கொண்டு நாட்டைச் சுரண்டி, வீட்டைச்சுரண்டி, தமது கொடியை நாட்டிக் கொடுங்கோல் புரிந்தனர். இந்தியர் அடிமையானதற்குப் பல காரணங்களில் நம்மவரின் உலக வெறுப்பும் பொருளாட்சியின்மையும் இரண்டு காரணங்களாகும். பொருள் செய்யவேண்டும். ஒழுங்கான தொழிலால் பொருள் செய்யவேண்டும். பொருளால் அறிவையும் தொழிலையும் அறம்பொருள் இன்பங்களையும் சன்மார்க்க யோக சாதனத்தையும் பரப்பவேண்டும்.

அன்பனே, ஊருக்கு நல்ல தொழிலால் பொருள்செய். குலம் வளர், நலம் வளர், வீடு தழைக்கச் செலவிடு; நாடு தழைக்க அறஞ் செய்.

**பணம்!**

பணத்தைக் கண்டு நான் பயப்படவில்லை; பணத்தைத் தொட்டால் என் துறவும் ஞானமும் போய்விடும் என்று அஞ்சவில்லை. ஆனால் நான் யாரையும் பணத்திற்காகக் கெஞ்ச மாட்டேன்; இனும் கேளேன் உழைத்துப் பிழைப்பதே என் இன்பம்; பேனுவால் உழைக்கிறேன்;

எனக்குவரும் பணமெல்லாம் என்னதன்று. ஒவ்வொரு காசையும் நான் பொதுநலத்திற்கே செலவிடுகிறேன். என் சிறு தேவை யளவுதான் நான் எடுத்துக் கொள்கிறேன். மீதியை என் வாழ்வின் லட்சியங்களை நிறைவேற்றவே செலவிடுகிறேன். என் பணம் உலகாத்மாவின் காணிக்கை.

**அருளும் பொருளும் சேர்ந்ததே இன்பம்**

**எல்லாரும் திருவோங்கி வாழ்க!**

# 7. நமது சமயம்

**அன்புக்கு,**

இந்தக் காலம் சிலர் கடவுளுக்கே சீட்டுக் கொடுக்கிறார்கள். சமயம் ஒழுக்கங்களை பழைய மூடப்பழக்கம் என்று கேலி செய்கிறார்கள். நீ அப்படிச் செய்யக் கூடாது. எனது உனது என்று பிரிவினை பேசும் வகுப்பு வாதங்களிலும் நீ சேராதே. எல்லாச்சமயங்களையும் ஊடுருவிப்பார்; உண்மையை அறி. மெய்கண்டாரில் முப்பொருள் உண்மை காண்பாய். இறைவன் அருள் அன்பின் மேலீட்டால் பெருகி பாசவினைகளையும், ஆசை வினைகளையும் படிப்படியாக வேரறுத்து, உயிரைப்பக்குவப்படுத்தித் தன்னறிவைத் தந்து முடிவில் இறையறிவைத்தரும். இது **மெய்கண்டார்** அருளிய **சிவஞான போதச் சுருக்கம்.** கீதை, உபநிடதம் பிரம்மசூத்திரம்—ஆகிய மூன்றிலும் வேதவேதாந்தசாரம் அடங்கியுள்ளது.

என்னுள் எதுவோ அதுவே உன்னுள், அவனுள், அவளுள்: நான் யாரோ அவனே நீயும் அவனும்அவளும், ஆதலால் உன்னைப்போல் என்னை மதி; என்னைப்போல் உன்னை மதிக்கிறேன். எல்லாம் ஒருமயம். இந்த சமநோக்கே ஞானம் என்பது வேதாந்தசாரம். பைபிள் படி! படி! வானரசைக்காண்; பரமபிதா போல் நிறை வுற்றிரு; அன்பும் பொறுமையும் தியாகமும் பேணு, கடவுளை நம்பியிரு என்பதே பைபிள் கருத்து. குரானை ஓது; அல்லா ஒருவனே வணங்கத்தக்கவன்; அருள்மய மான கடவுளின் மைந்தரே எல்லாரும் என்பது குரான் சாரம். ஜெந்தவஸ்தா படி; ஒளிமயமான கடவுளைத் தூய் மையாலும் வாய்மையாலும் வணங்கு; தீமைக்கு இடந் தராதே. நன்மையே செய். என்பதே ஜெந்தவஸ்தா சாரம். திருக்குறளையும் யோகசித்தியையும் படி. எல்லா மதங்களுக்கும் அருள் வழிகளுக்கும் பொதுவான சுத்த சன்மார்க்கத்தைக் காண்பாய். வள்ளுவரின் அறத்துப் பால் அன்பு, வாய்மை, தூய்மை, கடவுள் வணக்கம், திருவருள் உணர்வு இவற்றைக்கொண்ட இல்லறத்தை விளக்கும். பொருட்பால் வீட்டிற்கும் நாட்டிற்கும் இசைந்தபடி கல்வியும், செல்வமும், ஆற்றலும், வீரமும் கொண்டு இசையோங்கி வாழும் வகையைச் சொல்லும். காமத்துப்பால் ஆண்பெண் உறவின் அளவற்ற இன்ப் நுகர்ச்சியைக் கவிச்சுவையுடன் விளக்கும். யோகசித்தி ஆண்பெண் வாழ்வையே யோகமாக்கி உலகெல்லாம் ஒரே அருட்குலமாக வாழும் வகையை விளக்கும். அடிப் படையில் எல்லாச்சமயங்களும், சமயப்பெரியாரும் கண்ட உண்மை ஒன்றே. வேறுபாடுகளெல்லாம் மனிதனைப் பிடித்த மனவிகாரத்தால் எழுந்தனவே. எடுத்துக்காட் டாக, முற்காலம் சமணசைவச் சண்டை நடந்தது. பெரிய புராணத்தையும் சமணரின் மகாபுராணத்தையும் படித் தால் தெரியும். உள்ளே பார்த்தாலோ மதபேதமே கிடையாது. சைவம் சமணம் இரண்டும் கொல்லாநெறி யையே போற்றும். கொலையை மறுக்கும். சங்கக் காலத்தில் இரண்டும் ! வைணவத்துடன் தமிழகத்தில்

அமைதியாகத் தழைத்தன. பஞ்சாட்சரி செய்பவரும் பஞ்சநமஸ்காரம் செய்பவரும் அன்புடனே வாழ்ந்தனர். சண்டையெல்லாம் பிற்காலம், வீரமும், அருளுணர்ச்சியும் குன்றியகாலத்தில் எழுந்தன. சமயம் அரசியலிற் புகுந்தது; கூன்பாண்டியன் மதம் மாறினன். தான் கொண்ட மதத்தினரை அரசியலிற் புகுத்தினன். பல்லவனும் மதத்தின் பெயரால் சைவரை ஒறுத்தான். பிறகு தான் ஒருசமயம் மற்றொரு சமயத்தைப் பதம்பார்க்கத் தொடங்கியது. அப்பரும் மாணிக்கவாசகரும் பிறசமயங்களை வென்றது எதனால்? அருள் வழி வாழ்வால், மாசற்ற ஒழுக்கத்தால், ஒழுக்கமில்லாத சமய அறிவு, பழக்கமில்லாதவன் கையில் யாழைத் தந்ததுபோலாகும். பழகின கை பலஸ்வரங்களைக் கூட்டி இன்னிசை எழுப்புதல்போல், சமய உண்மைகளை அறிந்த உள்ளம், எல்லாம் ஒன்றென்னும் சமரஸ இசையை எழுப்புகிறது. இந்தக் காலம் மதவெறி தலை தெறித்து ஆடுகிறது. பிறசமயிகளைப் புண்படுத்தும் பழக்கவழக்கங்களைப் பெரும்பாலும் நீக்கவேண்டும். மதுரையில் சமணரைக் கழுவேற்றும் திருநாள் மிகக்கொடிது. அதேமாதிரி நடராசர் பரவை மனை தூதுசெல்வதாக நடக்கும் திருவிழாவும், முருகன் வள்ளி காதல் காட்சிகளும் இந்தக் காலம் வெறுப்பவையாகும்.. இப் பழங்கதைகளையே இந்துமதம் என்று நினைத்துப் பிறர் கேலிசெய்கின்றனர்.

நமது சமயம் சுத்தசன்மார்க்கம், தூய மெய்வழி. இப்போதிருக்கும் எல்லாச் சமயங்களும் அதில் அடக்கம். இச் சமயங்களுக்கும் மேற்பட்ட அறிவும் சமதர்மமும் அதில் அடக்கம்.

சுத்தான்ம ஒருமை, உள்ளறிவு, உலகறிவு, அன்பு, அருட்பணி, அருளுணர்ச்சி, தக்கதொழிலாற் பொருளீட்டும் வகை, ஈகை முதலிய நன்னெறிகளே சன்மார்க்கம்.

நீங்களெல்லாரும் சுத்தசன்மார்க்க வீரர்களாயிருங்கள்.

ஓம் சுத்த சக்தி

# 8. வடக்கும் தெற்கும்

அன்புத் தமிழா,

தமிழகத்தை விண்பொழில் ஆக்கவேண்டும். பிறநாட்டார் இங்கே ஆதிக்கம்பெற்று நம்மை அடிமைகளாக்காமல் விழித்திருக்கவேண்டும். ஆனால் பிறநாட்டாரை வேண்டுமென்றே வெறுக்கக்கூடாது; அவர்களை நண்பராக்கிக்கொண்டு, அந்த நட்புரிமையின் பயனை நுகர வேண்டும்.

தென்னாட்டில் மனத்திட்பம் உண்டு; வடநாட்டில் வினைத்திட்டமுண்டு. தென்னாட்டான் தன் பெரியாரைக் காற்றுப்புகாத மறதிப்பெட்டகத்தில் பூட்டி வைத்திருக்கிறான். வடநாட்டான் தன் பெருமையை, புலமையை, பெரியாரை உலகறிய விளக்கிப் புகழ்பெறுகிறான். வடக்கின் சுருட்டுப் புகையும், தெற்கின் புகையிலை எச்சிலும் ஒழிக! வடக்கின் காரியத் திறமையும் தெற்கின் அறிவுத்திறமையும் ஒன்றுசேர்க. நேருவும், ராஜாஜீயும் ஒன்றுசேர்க! வள்ளலாரும், தயானந்தரும் ஒன்று சேர்க! —இந்தியா வல்லரசெனப்பொலியும்! எதற்கெடுத்தாலும் பிராமணனைக் குறுக்கே கொண்டுவராதே. உள்ளது. தென்னாடு விழித்தெழுந்தது. வடக்கே தயானந்தரும் தெற்கே அருட்சோதி வள்ளலாரும் சாதியிறுமாப்பிற்குக் கோடையிடிகளாகத் தோன்றினர். அவர்கள் தோன்றியபோதே சாதிப்பித்தம் தலைசுழன்று வீழ்ந்து மாய்ந்தது.

தென்னாட்டில் ஒவ்வொரு வகுப்பினரிடையும் ஒவ்வொரு புலமை யுண்டு. ஒன்றின் திறமைமற்றொன்றுக்கு அருமையாகும். இந்த வகுப்பு இயல்பாகத் தொழிலை யொட்டியே பிறந்து பிறகு சாதியாக மாறிவிட்டது. கீதையில் சாதி என்ற மொழியில்லை—குண—கர்மவிபாகம் என்றே கண்ணன் குறிக்கிறான். எடுத்துக்காட்டாக மேளக்காரர், சேணியர், கொல்லர், இவர்களெல்லாம்

தொழிலை யொட்டித் தனித்து வாழும் தமிழர்—ஆனல் நாளடைவில் தனிமை தனிவகுப்பானது வருந்தத்தக்கது. மேளக்காரரைப்போல வேறு யாரும் நாதசுரம் அவ்வளவு தெளிவாக வாசித்தல் அரிது. செங்குந்தர் என்ருெரு வகுப்பினர் அக்காலம் இவ்வகுப்பினர் ஒட்டக்கூத்தர் போலப் புலமை நிரம்பி யிருந்தனர்— ஆடல் பாடல் நாடகம் இவற்றில் நிகரற்று விளங்கினர். இவ்வகுப் பினர் எளிதில் இசைத்திறம் பெறமுடியும். ஒரு நாயுடு, ராஜு, மறவரை இராணுவத்திற் போட்டால் விரைவில் போர்க்கலை பெறுவார்கள். அவர்கள் குருதியில் போ ராண்மை ஊறிப்போ யிருக்கிறது — பிராமணப்பிள்ளை மூளைப்படிப்பில் முன்னேறி விடுகிருன். அவன்மரபிற்கு மூளைத்திறமை உள்ளது.

இப்படி ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை உண்டு; அவரவர் திறமையை நாட்டு முன்னேற்றத்தில் உய்த்து, நாட்டு நலங்கருதலே நமது கடமை. அஃதின்றி சும்மா சாதிப்பித்தம் கொண்டு பிரிவினை செய்தல் தற் கொலையாகும்.

இரண்டே இனத்தைத்தான் நான் ஒப்புகிறேன்— ஆண் பெண். வேறெந்தச்சாதியையும் நான்ஒப்புவதில்லை. இதை எனது நண்பர் நன்மதிப்புப் பெரியார்கூட அறி வார். இதன் பெயருக்கு சிலர் கன்னுபின்னு கடிதம் எழுதுகிருர்கள். இதெல்லாம் வீரியத்தினவின் குறும்புகள். இனிக் கலப்பு மணங்களால் நாடெல்லாம் கலந்து ஒன்ருய் விடும்; காதலால் சாதி அழியும். சன்மார்க்க ஒழுக்கத் தால் சமய வெறிகள் ஒழியும். யாரும் யாரையும் தள்ளிநில் எனமாட்டார்கள்—இனி எவரும் எவர் மேலும் ஐயுறத் தேவையில்லை. அவரவர் புலமைக்கேற்ற கலையும் தொழி லும் வளர்த்து எல்லாரும் ஆன்மநேயராக வாழலாம். மனமொழிமெய்யால் பிறர் துன்புருமல் அன்புகொண்டு வாழத்தெரிந்தால் உலகில் அமைதி நிலவும்.

ஒருவன் பிராமணனு அப்பிராமணனு என்ற கேள்வி யில்லை. ஒருவன் நல்லவனு பொல்லவனு, நேர்மையனு

இருமன வஞ்சக் குண்டுணியா என்பதை அறிந்து பழகு தலே பகுத்தறிவு. அயோக்கியக் குண்டுணிப் பதர் உயர்ந்த சாதியிற் பிறந்தாலும் தாழ்ந்தவனே. ஆன்ம நேயன் கீழ்ச்சாதியிற் பிறந்தாலும் உயர்ந்தவனே. சாதி பாராதே நீதிபார்; சத்தியம் பார். அன்பைக்கொண்டு ஆளை அள. ஆரியர் திராவிடர் என்ற பிரிவினை கூடப் பிசகு. கலப்பில்லாத சமுதாயமில்லை. இன்று நாம் எல்லாரும் முதலில் தமிழர், பிறகு இந்தியர், பிறகு மனித சமுதாயத்தார்—இதை நினை—வடக்கு, தெற்கு, கிழக்கு மேற்கு—என்ற வேறுபாடு ஒழியும்—எல்லையற்ற ஒருமை வான் இலகும்.

**அன்பும் ஆன்மநேயமும் வாழ்க!**

## 9. தமிழர் வரலாறு

அன்பு மணியே,

தமிழ் வெறிகொள். இளைஞர்களுக்குத் தமிழ் வெறி யேற்று இப்போது நான்குபேர் கூடுமிடங்களில் திரைப் பட மினுக்கிகளைப்பற்றியும், காரியத்திற் குதவாத குப்பைச் செய்திகளைப்பற்றியும் பேசுகிறார்கள்.

அன்பே; **நான் தமிழன்** என்பதில் பெருமை கொள். எல்லாத்தமிழருக்கும் தமிழ்வெறியேற்று.தமிழர் பெருமை சங்கநூல்களில் பொதிந்துகிடக்கிறது. ஆனால் சங்கத்தமிழை இக்காலப் பேச்சுத்தமிழர்அறிந்துகொள்ள முடிவதில்லை. தமிழ் தொல்காப்பியரையும் நக்கீரரையும் தாண்டி, இளங்கோவையும் மீறிக் கம்பனுக்கு வந்து, அவனையும் தாண்டி புகழேந்திக்குப் பாய்ந்து, பிறகு தாயு மானருக்கு வந்து வள்ளலாரின் தெள்ளிய நீரோடையாகி கவிக்குயிலின் எளிமை பெற்று இன்று புதிய மறு மலர்ச்சி நடை தவழுகிறது. ஆதலால் இந்தக் காலத் திற்குத் தக்கபடி பழைய நூல்களையெல்லாம் எளிய இனிய உரை நடையில் எழுதிவிளக்கவேண்டும். அக்கருத்துக்

கொண்டே திருக்குறளின்பம், சிலப்பதிகாரம், திருமந்திர விளக்கம் முதலிய நூல்களை எழுத நேர்ந்தது. இனித்தமிழுலகில் **காலத்திற்கேற்ற புதிய நூல்கள் உலாவ வேண்டும்.** கலை நூல்கள் ஏராளமாக வேண்டும். அந்த முயற்சியே இப்போது நடக்கிறது. கலைகளில் வரலாறும் ஒன்று. கிப்பன் எழுதிய ரோமர் வரலாறு, மிஷ்லே எழுதிய பிரெஞ்சர் வரலாறு, ஹாலம் எழுதிய ஆங்கிலர் வரலாறு, இவைபோன்று தமிழர் வரலாறு தொகுக்க வேண்டும். இப்போது இந்தியவரலாறு எழுதுவோர் வடநாட்டுப்பெருமைகளையும் சண்டைகளையுமே மிகைப் படுத்திக் கூறுகிறார்கள். எந்த இந்திய வரலாற்றைப் பார்த்தாலும், அசோகனுக்கும், ஹர்ஷனுக்கும் பக்கம் பக்கமாக இடமிருக்கும். திருமாவளவனுக்கும், நெடுஞ் செழியனுக்கும், செங்குட்டுவனுக்கும், கம்பனுக்கும் இட மேயிராது. திராவிடரைப்பற்றி இரண்டு மூன்று பக்கம். சேரசோழபாண்டியரைப்பற்றி நாலைந்து பக்கங்களுடன் தமிழருக்குக் கைகழுவிக் கண்ணைத் துடைத்துவிடுவார்கள். நூல் முழுதும் வடநாட்டுக் கதையாகத்தான் இருக்கும்.

இந்தக் கொடுமை மாறவேண்டும். ஓரகம் ஒழிய வேண்டும். இப்போது இராசேந்திரப்பிரசாதர் தலைமையில் இந்திய வரலாறு புதிதாகவும் விரிவாகவும் தொகுக்கப்படுகிறது. அதில் தமிழர் வரலாறு தக்க இடம்பெறலாம். பணத்தை அள்ளித் தந்திருக்கிறோம். ஆனாலும் வகையறிந்த புலவர்மணிகள், சென்னை அல்லது திருச்சிராப்பள்ளியில் வரலாற்றுக் குழு நிறுவி, வேலை செய்யவேண்டும்.

**எந்தாய் வாழ்க!**

# 10. தமிழுணர்ச்சி

அருமைத் தமிழ்ச்சிங்கமே,

நின் தமிழுணர்ச்சி வாழ்க! இன்று பிள்ளையார் சுழி, சிவமயம், ராமஜயம்—என்பதற்குப்பதில் எனக்கு எழுதும் தமிழர் முத்தமிழ் வாழ்க, தமிழ்த்தாய் வாழ்க, எந்தாய் வாழ்க என்று தலைப்பிட்டு எழுதுகிறார்கள்; சென்ற முப்பதாண்டுகளாக நான் தமிழர் முன்னேற்றத்திற்காகச் செய்ததவம் நிறைவேறிவிட்டது. தமிழகம் என் கோவில்; தமிழர் கூட்டம் என் கடவுள்; தமிழ் என் உயிர்ப்பு. தமிழ்ப்பணியே என் வழிபாடு; தமிழர் சிறப்பே என் பெருமை. தமிழன் முழுத்தமிழனாகுக; சங்ககால வீரமும், இக்காலக் கலை விரிவும் புதுத்தமிழனிடம் பொலிக! திருக்குறள்—வாழ்வும், திருவாசக—உள்ளமும், கம்பன்—கலையும், சேக்கிழார்—அருள் நெறியும், அருட்பா—நினைவும், யோக சித்திப்—பயனும் தமிழனுக்குப் பெருகவேண்டும். முன் எழுந்த திருத்தொண்டர் போல் இன்று வீறு பெற்ற தமிழ்த் தொண்டர் அணியணியாக முன்வர வேண்டும்.

செய்க தமிழ்ப்பணி! இளந்தமிழ் வீரர் வாகை சூடுக! தமிழ்த்தாயின் முடிமணியாக விளங்குக! நீங்களெல்லாம் தமிழுக்கு சிகரமணிகளாக விளங்குக இளந்தமிழ் மணிகாள்! உங்களை அன்பினால் தழுவிக்கொள்கிறேன். என் மனத்துடிப்பை உங்கள் அன்பிற்குப் பரிசளிக்கிறேன்.

தமிழே யெனது தாரக மொழியாம்
தமிழர் அனைவரும் சமரஸக் குடும்பம்
தமிழுல கெனது தங்கக் கோயில்
தமிழ்ப்பணி யெனது சலியா மூச்சு
தமிழ்த்தாய் எனது சமரஸத் தெய்வம்
தமிழன் பெனது சலியாப் பூசனை
தமிழின் இன்பமே தமிழர் இன்பம்

என்று ஒவ்வொரு தமிழ் உள்ளமும் உணர்க.

தமிழ் வாழ்க! அன்பு வாழ்க!!

சு. பா.

# 11. தமிழ்நடை

அன்புத்தமிழா,

தமிழ் எப்படியிருக்கவேண்டும் என்று பலர் கேட்கிருர்கள்; **இயல்பாயிருக்கவேண்டும்**; தமிழ்ச் சொற்கள் தமிழ் உள்ளத்திலிருந்து தமிழ்ச்சிந்தனை யருவியாகத் தமிழ்க்கலையோட்டமாக வரவேண்டும். ஒவ்வொரு பறவைக்கும் பாட்டுண்டு; ஒவ்வொரு அறிஞனுக்கும் நடையுண்டு. **குயிலைப்போல மயில் பாடமுடியாது; மயிலைப்போலக் குயில் ஆடமுடியாது.** மாசற்ற உள்ளத்திற் பூத்த மருவற்ற தமிழே தமிழ்—வள்ளுவர், கம்பர், சேக்கிழார், தாயுமானர், வள்ளலார், வேதநாயகம், பாரதியார் தமிழ் அத்தகைய இயல்பான தமிழ். இப்போது பல இளந்தமிழர் இயல்நடை பயில்கின்றனர். அழகும், பயனும் நிரம்பிய தமிழுக்கு சேதுப்பிள்ளை, திரு. வி. க ஆகிய இருபுலவர்களையும் குறிக்கலாம்.

தமிழர் தமிழைப் பாதுகாக்கவேண்டும். பெரும்பாலும், இயன்றமட்டும் தமிழ் தமிழாகவே இருப்பது என்விருப்பம்: இன்றியமையாத திசைமொழிகளைக்கையாளலாம். ஆனல் திசைமொழி தாய்மொழியை விழுங்காது பார்த்துக்கொள்ள வேண்டும்.

**புதுவை பாரதியார்**

தனித்தமிழைச் சிலர் போற்றுகிருர்கள்; பலர் தூற்றுகிருர்கள். தூற்றுவோர் இவ்வாறு வழக்காடுவர் :— இன்று நாம் வழங்கும் தமிழ், வடமொழி, தெலுங்கு, அரபி, உருது, பார்சி, ஆங்கிலம் எல்லாம் சேர்ந்த கதம்பம்; நம் அரசியற் சொற்கள் பெரும்பாலும் உருது, பார்ஸி நமது சாப்பாட்டிலேகூட லட்டும் லாடும் பூரியும் பிஸ்கோத்தும் போண்டாவும், சாக்லெட்டும், குலாப்ஜானும் புகுந்து விட்டன. பருப்புக் குழம்பிற்குக்கூட பேளாஹு—ளிபோட்டியாக வந்து விட்டது. எந்தாய் வாழ்க என்ற தமிழர்

வந்தேமாதரம் போடுகிறார்கள். நமது சமயச் சொற்கள் தத்துவச் சொற்களெல்லாம் வடமொழி. ஆத்மா, ஜீவன் முக்தி, சித்தி, யோகம், போகம், அந்தக்கரணம், தியானம் தவம், சமாதி எல்லாம் ஆரியம். தற்காலத்திற்கு வேண்டிய புதுமைச் சொற்கள் பல ஆங்கிலமே; காபி ஓட்டல், கபே என்கிறார்களேயொழிய ஊணகம், என்பதில்லை. போதி வேதி கணிதக்கலைகளை யெல்லாம் ஆங்கிலச் சொற்களாலேயே அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது, தனித் தமிழில் எழுதினாலும், தொடக்க வகுப்புகளுக்கு எழுதலாம். பெரும்புலமை வகுப்புகளுக்கு எழுதுதல் முடியாது. எடுத்துக்காட்டாக கிரேயின் உடற்கூறு, ஹாலிபர்டன் உடல் நுட்பம், அலெக்ஸாண்டர் ஸ்மித் வேதி நூல், கிளேஸ் புருகின் போதி நூல்களைத் தமிழில் முழுதும் மொழிபெயர்க்கச் சொற்கள் இல்லை. ஆயிரக் கணக்கான சொற்கள் ஆக்கவேண்டும், அல்லது கடன் வாங்கித் தீரவேண்டும். தமிழ் வடமொழியுடன் சங்க காலம்முதல் இணைந்து கலந்து வாழ்கிறது. இரண்டும் தந்தையும் தாயும் போலும். கம்பர், சேக்கிழார், தாயுமானர், வள்ளலார், பாரதியார் போன்ற பெருங் கவிகள் வடமொழி கலந்தே எழுதியிருக்கிறார்கள்.

ஆதலால் இன்று வடமொழியை நாம் வெறுத்தல் வீண். தியாகம், யோகம், போகம், வேதாந்தம், சித்தாந்தம், மனம் போன்று வழக்கில் வந்த சொற்களை அப்படியே போற்றுதலே மேல். மேலும் வடமொழி தமிழுக்கு ஓசை யினிமை யளிக்கிறது. ஸர்வம் என்பதைச் சருவம் என்றும், ஜபம் என்பதை சவம் என்றும் சொல்லல் அமங்கலமாயிருக்கிறது. வடதென் மொழிகள் கலப்பதால் குற்றமில்லை. தற்கால வாழ்விற்கு ஆங்கிலமும் வேண்டுமளவு கலந்து கொள்ளல் வேண்டும். அப்போதே நமது பேச்சுத் தெளிவாக விளங்கும்; எடுத்துக்காட்டாக புக்போஸ்டை புத்தக அஞ்சல், மோட்டாரை தானியங்கி, என்றால் விளங்காது. ரயிலை, புகைவண்டி என்றால் புகையும் பல வண்டிகள் உண்டு. ஆதலால் தனித்தமிழ் இந்தக்

காலத்திற்கு இயலாது, ஒத்து வராது. இது தற்காலம் பெரும்பாலார் பேசும் பெருவழக்காகும்.

இனித் தனித்தமிழ் வேண்டும் என்பார் கட்சியை அறிவோம். இக் கொள்கையினர் பெரும்பாலும் தமிழை ஆழ்ந்து கற்றவர்; பலர் ஆங்கிலமும் அறிந்தவர். இவர்கள் உள்ளம் தமிழ் தமிழர் தமிழகம் என்று துடிக்கும். இவர்கள் கட்சியை நான் என்றும் போற்றியே வருகிறேன். ஏனெனில் இவர்கள் தமிழின் உரிமையைப் பாதுகாத்து வருகிறார்கள். நாம் இழந்த பல சொற்களை மீண்டும் வழக்கத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். மறைமலையடிகள், உமாமகேசனார், கா. சுப்பிரமணிய பிள்ளை, இளவழகனார் முதலியோர் எழுதும் தனித்தமிழ் நடை செவிக்கு இனிமையாகவே யிருக்கிறது. தமிழில் கண்டபடி பிறமொழிகளைக் கலந்தால் அதன் தூய்மை கெடுகிறது. நல்ல நல்ல சொற்களெல்லாம் வழக்கற்றுப் போகின்றன. தமிழின் ஆக்கம் குறைகிறது. தமிழ் பிறமொழிகளுக்கு அடிமைப்படுகிறது. மொழியடிமையால் அரசியல் அடிமைத்தனமும் புகும். தமிழின் பத்தினித் தன்மை கெடும்படி வடமொழியோ, ஆங்கிலமோ கலக்கக் கூடாது என்பது இந்த அறிவாளர் கொள்கையாகும். இவர்கள் கட்சிக்கு ஆட்பெருக்கம் இக்காலம் இல்லாவிட்டாலும், இக் கட்சியில் உண்மையும், திண்மையும், தமிழுக்கு அளவற்ற நன்மையும் உண்டு.

தமிழ் தனித்து இயங்குமா என்று பலர் கேட்கிறார்கள். இயங்கும் என்பதே எனது விடை. காலம் மாற வேண்டும்; தமிழ்நாடு தமிழர் அரசாய் விளங்கவேண்டும்; தமிழர் தமிழிலேயே எல்லா விவகாரங்களையும் நடத்த வேண்டும். உலகிலுள்ள கலைச்செல்வமெல்லாம் தமிழில் வழங்கவேண்டும் என்பதே எனது கனவு. அதற்கிசைந்த நூல்களையே நான் சென்ற முப்பதைந் தாண்டுகளாக எழுதி வருகிறேன். தமிழில் வேண்டிய சொல்வளம் உள்ளது. பழைய நூல்களைக் கொண்டும், புதிய ஆராய்ச்சியைக்கொண்டும் வெப்ஸ்டர் அகராதியைவிடப் பெரிய

பெருஞ்சொல்லகராதி வகுக்கமுடியும். பிரெஞ்சு மொழியை விடத் தமிழில் சொற்கள் மிகுதியாயுள்ளன. இன்னும் இருபதாண்டுகள் தமிழர் தமிழ் வளர்ச்சியிலேயே கருத்தூன்றி முயன்றால், தமிழ் ஆங்கிலத்திற்கு மேல் ஓங்கி நிற்கும். இப்போது இந்திய மொழியாக விளங்கும் இந்துஸ்தானியைவிடத் தமிழ் பன்மடங்கு சொல்வளமும், பொருட்செறிவும் தன்னுறுதியும் உடையது. இந்திய மொழிகள் அனைத்தும் வடமொழி, பார்ஸி, உருது, ஆங்கிலம் கலவாமல் இயங்க முடியாது. வங்கமொழியில் நூற்றுக்கு அறுபது வடமொழி பாலி; மீதி பார்ஸி, ஆங்கிலம். தெலுங்கில் பாதி தமிழ், பாதி வடமொழி. மலையாளம் கன்னடம்—நூற்றுக்கு எழுபத்தைந்து தமிழ், மீதி வடமொழி. தமிழ் ஒன்றுதான் எம்மொழிக் கலப்பும் இல்லாமல் தனியரசு செலுத்தக்கூடிய மொழி. அதுவே இந்தியாவின் முன்மொழி; தொன்மொழி. தொல்காப்பியம் எழுந்து 6000 ஆண்டுகள் ஆயின. அதற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழ் இலக்கியச் செல்வத்துடன் வளம் பெற்றிருக்க வேண்டும்.

மோஹஞ்சதாரோவின் புதை பொருள்களில்தமிழும் சைவமும் காண்கின்றன. தமிழ் இன்றும் தனித்தியங்கும் வளமை பெற்றது. தமிழில் இன்று ஏராளமான பிறமொழிகள் வந்து புகுந்துள்ளன; பழந்தமிழை, தனித்தமிழை நம்மவர் பலர் அறிந்து கொள்ள முடியவில்லை என்றால் யார் குற்றம்? தமிழின் குற்றமா? இல்லவேயில்லை. தமிழர் குற்றமே. ஒருகாலம் இந்தியா முழுதும் சைவம் நிறைந்திருந்தது. இன்று நாட்டில் மூன்றிலோர் பங்கு இஸ்லாமியமானதேன்? மூன்று கோடிக்குமேல் கிறிஸ்துசமயிகளானதேன்? இன்னும் பல மதங்களிற் புகுந்து சைவர் சைவருக்குப் பகைவரானதேன்? அவர்தம் உறக்கத்தால். அவ்வாறே ஒரு காலம் தமிழே வழங்கிய நாட்டில் வடமொழி கலந்து மலையாளமும், தெலுங்கும் கன்னடமும், துளுவமும் எழுந்தன. தமிழிற் பிறந்த கேரளமும், வடுகும் இன்றுவடமொழியே

தங்களுக்குத் தாய்மொழியென்பதேன்? தமிழர் தமது மொழியைப் பேணாததால் அன்றோ? நாம் என்று மொழி வளத்தை இழந்தோமோ அன்றே உரிமை யிழந்தோம். அடிமையானோம். இன்று தமிழகம் எங்குள்ளது? எந் நிலையில் உள்ளது? வடக்கே போனால் வடுகர், தெற்கே வந்தால் மலையாளர், மேற்கே திரும்பினால் கன்னடர்; கிழக்கே துறைமுகங்களைப் பார்த்தால் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர். இப்படி நாற்புறமும் தமிழகம் சிறைப் பட்டிருக்கிறதே. தமிழன் உணர்வானா? தகுதியிருந்தும் உரிமையிருந்தும், தமிழன் உறங்குவதேன்? திருமாவள வனும், நெடுஞ்செழியனும், வள்ளுவரும், அப்பரும், தொல் காப்பியரும், நக்கீரரும் வளர்த்த தமிழ்மரபுமொழியுரிமை யிழந்த நாளே அரசுரிமை யிழந்தது.

ஆனால் தமிழர் விழித்தெழுந்து விட்டார்கள். வீரத் தமிழர் தெலுங்கு மயமாயிருந்த இசையரங்குகளைத் தமிழிசை மன்றங்களாக்கியது நமக்கொரு வெற்றி கலைச்சொற்களைப் பெரும்பாலும் தமிழாக்கியது ஒரு வெற்றி. தமிழர் இன்று தமிழ் நாவலரையும் பாவலரை யும் போற்றிப் பொருளுதவிவருவது மற்றொரு வெற்றி. தமிழர் இனித் தூயதமிழிலேயே பேசுவதென்று வைத் துக்கொண்டால், வெற்றிமேல் வெற்றிவரும். இன்று தூற்றுவோரும் நாளைப்போற்றுவார். ஜப்பானியர், வெள்ளையர் கலைகளையெல்லாம் கற்றுத் தமதுதாய்மொழி யிலேயே நூல்கள் வகுத்துக் கல்லூரி மாணவருக்குத் தனி ஜப்பானியத்திலே தான் கற்பிக்கின்றனர்; சீனர் அவ் வாறே செய்கிறார்கள். பிரெஞ்சு மாணவர் ஆங்கிலத்தில் கலை கற்பதில்லை—ரஷ்யமாணவர் பிரெஞ்சிற் கற்பதில்லை ஆங்கிலர் செர்மானியத்திற் கற்பதில்லை. அவரவர் தாய் மொழிகளிலேயே அவரவர் கற்கிறார்கள். தமிழர் ஏன் தனித்தமிழில் பேச, எழுத, கலைநூல் வகுக்கக் கூடாது? தமிழர் உருப்படவேண்டுமானால் மார்தட்டி எழுந்து எல்லா வகையிலும் தம் உரிமையைக் காக்கவேண்டும்.

எந்தாய் வாழ்க!

# 12. தமிழ்க் கழகம்

**அன்புப் பழம்நீ,**

தமிழ் நாட்டிற் பிறந்து தமிழைத் தாய்மொழியாகப் பேசுவோர், தமிழைக்கற்றுப் போற்றி வளர்ப்பவர், இவர் அனைவரும் தமிழர்களேயாவர். சாதிசமயவேறுபாடின்றி, தமிழர் அனைவருக்கும் பொதுவாகும் மாந்தருள் எத்தனையோ வேறுபாடிருக்கலாம். ஆனல் தாய்மொழி யன்பில் வேறுபாடிருக்கமுடியாது. **மொழி ஒற்றுமையால் மன ஒற்றுமையாகும்.** தாய் மொழியை நன்ருகக் கருத்தூன்றி வளர்த்தால், கல்வி, தொழில், வாணிபம், பொருளாதாரம், அரசியல், சன்மார்க்கம் முதலிய எல்லாத் துறைகளிலும் நாடு சீரோங்கிப்பொலியும். தமிழர் ஒரு குல மக்களாக முன்னேற வழி தமிழ் மொழிப்பற்றேயாம். தமிழன்பால் சாதி மதச் சிக்கல்களையெல்லாம் நீக்கலாம்—இங்கிலாந்திற்கு எப்படி ஆங்கிலமோ, அப்படி நமது தமிழகத்திற்கும் தமிழாகும். தமிழ் வளர்ச்சிக்காக எத்தனைபேர் எத்தனைக்கழகங்கள் நிறுவித்தொண்டு செய்தாலும் மிகையாகாது.

**கிறிஸ்துவ இளைஞர் சங்கம்** தமிழ்வளர்ச்சியில் கருத்தூன்றியது பற்றி மகிழ்ச்சி. உண்மையைப்பார்க்கப் போனல் நமது தமிழுக்குக் கிறிஸ்தவப்பாதிரிகள் செய்துள்ளதொண்டு அளப்பரிது. உரை நடைக்கு வழி கண்டவர் அவரே.

வீரமாமுனிவர், போப், கால்டுவெல், பாபுலி போன்ற கிறிஸ்துவப்பெரியார் தமிழுக்கு அரிய பணி செய்திருக்கிறார்கள். இன்று Y. M. C. A. தமிழ்க் கழகம் நிறுவித் தமிழ்ப்பணிசெய்ய முன்வந்தது தமிழ்வளர்ச்சிக்கு நல்ல காலமாகும். குறுகிய வகுப்புவாதமில்லாமல்,எல்லாரையும் அன்பினல் ஒரு குலமென நினைக்கும் பரந்த நோக்கங்கொண்டு தமிழ் மாணவர் கழகம் தனக்கியன்ற தாய் மொழிப்பணியைச் செய்து, நலமோங்குக !

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'
என்று முழங்கும் இளந்தமிழை நன்று வளர்
மாணவரின் கழகம்; வாழ்க, கலைவீரர்
மாணவும் போற்ற மகிழ்ந்து.

**தமிழுணர்ச்சி தழைத் தோங்குக!**
தமிழ்த் திருத் தொண்டருக்கெல்லாம்
அன்பு, அன்பு, அன்பு.
சு. பா.

# 13. கம்பன்!

**அன்புள்ள பழநியார்க்கு,**

தமிழுக்குக் கதி கம்பன், திருவள்ளுவர் குறள். இரண்டும் தமிழுக்குப் **பொன்னும் மணியும்** போன்றவை.

கம்பனைச்சிலர் தீவைத்துக்கொளுத்துகிறார்கள்; அவர்கள் தமிழுக்கே தீவைப்பவராவார். கொல்லைப் பருத்தியைக்கொளுத்திச் சாம்பலாக்கி ஊரை அம்மணமாக்க முயன்ற பேதையின் கதைதான்! தமிழருக்கு இத்தகைய மதிக் கேடு வந்தது வருந்தத்தக்கது. கம்பர் பிராமணரில்லை வள்ளுவரும் பிராமணரில்லை; எதற்கும் ஐயம், எதற்கெடுத்தாலும் ஒரு சாதியைத்தாக்குதல்—என்றிருந்தால் —**தமிழ் நாட்டைக் கடவுளே காக்கவேண்டும்.** இப்போது சாதிபேதம் பழம்பசலி மூடப்பழக்கமாய் **விட்டது.** இனி அது முற்றிலும் மறைந்தே போகும். **கம்பனும் வள்ளுவரும்** ஒரு சாதிக்கு உரியரல்லர்; உலகிற்கேஉரியர். கம்பனைக் கொளுத்தும் தமிழர் தங்கள் புகழுக்கே தீ வைக்கிறார்கள்.

கம்பன் **வீரவாழ்வின் சொல்லோவியம்.** கலையின் ஆழமும் அகலமும் உயரமும் கம்பனே; கம்பன் இன்பக்கலையுலகம் வீரச்சுடர்க்கொழுந்து, அறிவின் மலையருவி; கம்பனில் இல்லாததில்லை. கம்பன் ஓர் இன்பக் **கனவுலகம்** சுடரோங்கும் நாதச்சித்திரம் — தடதட

வென்று பொங்கிவரும் கவியருவி. அதில் நாம் தோய்ந்து தோய்ந்து இன்புறலாம்.

கவிகளை ஆக்கும் கவி. கம்பனைப் பாடலாம், ஆடலாம், நடிக்கலாம், படிக்கலாம்; உச்சிமேல் வைத்துக் கொண்டாடலாம் கம்பத் தமிழ் ஹோமர்—கிரேக்—ஷேக்ஸ்பியர்—மில்தன்—ஆங்கிலம் இரண்டிற்கும் இணையான ஒரே இந்திய நூலாகும்.

நாட்டரசன் கோட்டைக் கம்பர் சமாதியில் அமர்ந்து, என் இளமையில் பலதடவை கம்பக் கவிதையைச் சுவைக்கும் இன்பம் பெற்றேன். ஆங்கிலத்திற்கு ஷேக்ஸ்பியர் போலவும், ஹிந்திக்கு துளசிதாசர் போலவும், தமிழுக்குக் கம்பனே கவியரசனாக விளங்குகிறான். மேற்சொன்ன புலவர்களைப் போலவே கம்பனும் பிறவிக்கவி, இயற்கைப்புலவன் கம்பன் கலாஹிமாலயம் காவிய கங்கை.

கம்பனைப் போற்றும் வைரத் தமிழர், கலையுலகின் முன், கோபுரம் போல நிமிர்ந்து நடக்கலாம். கம்பன் திருநாள் கலைத்திருநாளாகப் பொலிக.

அன்பு வாழ்க!

சு. பா.

## 14. கம்பரும் சேக்கிழாரும்

அன்புத் தமிழா,

நாம் உயர நாடுயரும். பெரியாரை மதி; பெருமை பெருகும். தமிழகத்தில் எத்தனையோ அரிய அருட் பெரியார் தோன்றினர்; எல்லாரையும் மூலையில் ஒதுக்கி விட்டோம். நாம் தமிழ்ப்பெரியார் திருநாட்களைக் கொண்டாட வேண்டும். மாணிக்கவாசகர், அப்பர், நம்மாழ்வார், கம்பர்—வள்ளுவர்—சேக்கிழார்—வள்ளலார் —இவ்வெழுவரும் தமிழருக்கு அருட்கலை யளித்த பெரியார். இப்போது கவிக்குயில் பாரதியார் திருநாளைக் கொண்

டாடுவதுபோல் இப்பெரியார் நாட்களையும் கொண்டாடவேண்டும்; அதனால் நாட்டில்சி சன்மார்க்கஉணர்ச்சி பரவிப்பொலியும். அரசியல் மட்டும் ஒரு நாட்டை முன்னேற்றாது. அரசியலே மூச்சான ஐரோப்பா போர்க்களமாய்விட்டது. வெண்ணூடுகள் மூளையறிவிற்சிறந்தன. மூளையால் மோட்டார் முதல் விமானம் வரையில், பீரங்கி முதல் அணுவெடிவரையில் எத்தனையோ கருவிகளைச் செய்து உலகை ஆளப்புகுந்துள்ளன; வல்லரசுகள் கொல்லரசுகளாகி ஆக்கத்தினும் அழிவையே மிகுதியாகச் செய்கின்றன. மூளைவளர்ச்சி போருக்கு மூனைகிறது. உள்ளம் வளரவில்லை; உள்ளத்தனையது உயர்வு. உள்ளமே அன்பின் இருக்கை. உள்ளம் வளர்ந்தால் வாழ்க்கை **சன்மார்க்கமாகும். சன்மார்க்க அரசியலே உலகிற்கு அமைதியின்ப மளிக்கும்.**

திருமுறைநூல்கள், திருக்குறள், கம்பராமாயணம் பெரியபுராணம், அருட்பா, தாயுமானர் போன்ற **அருள் நூல்கள்** சத்தசன்மார்க்க (தூய மெய்வழி) வேதங்களாகும். அவற்றைக் கற்கவும் கேட்கவும் பெரியவர் திருநாள் ஒரு வாய்ப்பாகும். கம்பர் **கலைக்கவி; சேக்கிழார் அருட்கவி;** கம்பர் கவியின்பம் தருவார்; சேக்கிழார் அருளின்பந் தருவார். கம்பர் கவிதை புலவர் விருந்தாகும். சேக்கிழார் வாக்கு தெய்வப் புலவரான அடியார்க்கு நல்விருந்தாகும். தமிழர் கம்பர்திருநாளுடன் சேக்கிழார் திருநாளையும் கொண்டாடுக. சிந்தைக்கினிய சேக்கிழார் தெள்ளிய பாக்கிழார், கவிதைக்கினிது கம்பன்; இருவரையும் தமிழர் கொண்டாடவேண்டும். சேக்கிழார் வாக்கைப் போன்று வாழ்வைத் தூய்மையாக்குவது வேறெதுவும் இல்லை.

திருவாசகம் இலக்கணமானல் சேக்கிழார் இலக்கியம் என்னலாம். பயில்க.

**தமிழர் உளந்தோறும்; சிவமணம் கமழ வாழ்க**

அன்பு, சிவன், அருள்!

**சுத்தானந்த பாரதி.**

# 15. இளந் தொண்டர்

இளந் தொண்டர்காள்!

நீங்களே வருங்காலத் தமிழர் கூட்டம்; நீங்கள் நலமோங்க, நாடும் நலமோங்கும்.

நாட்டு நிலையை அறிந்தீர்களா? செய்தித் தாட்களைப்படித்து அரட்டை யடித்துக் காலம் போக்காதீர்கள்! **பாதிரிமார்கள் போல் பணிசெய்யுங்கள்.** குக்கிராமங்களில் கல்வியொளியே புகாமல் மக்கள் இருளில் வழிதடவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கண்ணைத்திறக்கும் கல்வியைப் புகட்டுங்கள்; அவர்கள் வறுமையால் வாடுகிறார்கள்; அவர்கள் குடில்தொறும் தொழில் முயற்சியை ஊக்குங்கள். அவர்கள் சண்டை போட்டுச் சங்கடம் விளைக்கிறார்கள். அவர்களுக்குச் சுத்த சன்மார்க்கத்தை விளக்குங்கள். திலகர் கட்டத்தில் நூறு பிரசங்கம் செய்வதைவிட ஒரு கிராமத்தில் கல்வி பரப்புவது சீரியபணியாகும். கல்வியே மக்கள்கண்; **சன்மார்க்கமே உள்ளம்**; தொழிலே கைகால்கள். கிராமவாசிகள் சாதிகுலவேறுபாடுகளை மிகைப்படுத்திச்சண்டையிடுகிறார்கள். அவர்களுக்கு ஒற்றுமையை ஊக்குங்கள். ஒன்றேகுலம், ஒன்றே கடவுள் என்பதை விளக்குங்கள். தமிழகக் கோயிலில் தமிழர் ஓர் குலமாய் அன்புடன் வாழ் வழி செய்யுங்கள்.

பாட்டு, கதை, நாடகங்களால் பாமர ஜனங்களுக்கு நாட்டன்பும், மெய்வழியும் புகட்டுங்கள். இதுவே இன்றைய இளைஞர் செயத்தகும் செயலாகும் அறிக! முயல்க!

சு. பா.

## 16. பாரத சக்தி

அன்பு மாணிக்கமே,

என் மௌனத்தவம் சுயநலத்தவம் அன்று; எனக்கு வேண்டிய ஆத்ம சுகத்தை, உள்ளின்பத்தை இருபத்து நான்காம் ஆண்டிலேயே அடைந்து விட்டேன். இன்று நான் அல்லும் பகலும் இந்த நான்கு சுவர்களுக்கும் நடுவே தனிமோனத்தில் செய்வது தமிழ்த்தவம்; அதற்கொரு சக்தி மின்சாரம் என்னுள் ஓடுகிறது. மின்சாரம் திருவருளால் நடக்கிறது. அதனுல் பேனு அசைகிறது; மூளை நினைக்காமற் கூடப் பேனு அசைகிறது. உள்ளாழ்ந்து பணிசெய்வதால் உலகில் மனதைச் சிதற விடாது, உட்குவிந்திருக்கிறேன். இத்தனிமோனத்தை அறிவார், அறிவார். பிறர் ஏதோ சாமி கதவை அடைத்துத் தூங்குது என்று நினைப்பர்.

தமிழன்னையை உலகின்முன் பெருமைப் படுத்தும் ஒரு பொன்—மணி—மகுடத்தை நீண்டகாலமாகத் தயாரித்து வருகிறேன்—பாரத சக்தி—இதுவே அதன் பெயர் 50000 வரிகளில் அமைந்த இப்பெருங்காப்பியத்தைத் தமிழில் வெளியிட்டு ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து உலகிற்குத் தந்து விட்டால் எனது உள்—தவம் முடிந்தது—பிறகு என் ஒவ்வொரு மூச்சையும் பொதுநலத் தொண்டாக்கலாம். திருவருளைத் துணைக் கொண்டு நடப்பன நடக்கும்.

அன்பு.

## 17. ஆத்ம சக்தி

அன்புப் பழம்,

இரணியன் (கனகன்) மகனை பிரகலாதன்போல மனத்திற் கடவுளுறுதியுடன் மாற்ருன் செயல்களிலுள்ள தீமையை ஆத்மபலத்தினுல் பொறுத்து வெல்லவேண்டும்:

'ஆண்டவனுள்ளான், அன்பரைக் கைவிடான், அச்ச மில்லை,' யென்ற கருத்துறுதியே அடியார் வலிமை. மனிதன் பகைவனல்லன்; மனப்பேயே பகை. அதை அறப்போரில் வெல்க! வாய்மையே வச்சிராயுதம்; அன்பே அம்பு; பொறுமையே வில்; ஆத்ம சக்தியே பீரங்கியினும் பெரிய படைக்கலன். இவற்றைக் கொண்டே அன்று பிரகலாதனும், இன்று மகாத்மா காந்தியும் அசுரமாயத்தை வென்றனர்.

ஒவ்வொரு நூற்றுண்டிலும் இரணியன் வருகிறுன். மனித சமுதாயத்திற்புகுந்த ஆணவத்திமிர்தான் இரணியாசுரன். நாத்திகச் செருக்குற்ற இரணியன் நாராயணனை நம்பிய தன்மகனைக் கொடுமை செய்தான்; அவனுக்கு நஞ்சிட்டான்; அவனை யானைக்காலில் வைத்திடறினன்; மலையினின்று உருட்டினன். அத்தனை யிடர்களும் யாக்கைக்கன்றி உள்ளேயிருக்கும் சுத்தான்மாவுக்கன்று; அது 'நின்று நிலவும் உண்மை'—நான் என்னும் உணர்வு கொண்டு பொறுத்தான் பிரகலாதன்.

ஆணவச் சூலம் யாக்கையைக் குத்தும்; ஆன்மா முன்னே அது மழுங்கிப் போகும். உலகப் போர்களை யெல்லாம் ஆராய்ந்தால், ஒருவன் மனத்திலுள்ள 'நான்' என்னும் ஆணவம், இன்னொருவர் மனத்திலுள்ள 'நான்' என்னும் ஆணவத்துடன், கட்சி கட்டி வாள் வீசுவதே யாகும். 'குத்துவேன், கொல்லுவேன்! என்பதெல்லாம் மனவகந்தை மற்றொரு குடலைப் பார்த்துச் சொல்லுவதே.

குண தொந்த விகாரங்களாலான காரிய சரீரத்தைத் தாண்டி, காரண சரீரத்திலிருக்கும் சுத்தான்ம உணர்வுடன் வாழ்ந்தால் மனப்பகை, இனப்பகை யெல்லாம் மாயமாய்ப் போகும்.

ஆத்ம சக்திக்கு அளவற்ற ஆற்றலுண்டு. நெப்போலியன் பீரங்கி மதம் வாதர்லூவில் (Waterloo) வீழ்ச்சி பெற்று ஹெலனவில் (St. Halena) சிறைபட்டிறந்தது. ஏசுநாதரின் ஆத்ம சக்தி சிலுவை யேறியும் சிரஞ்சீவி

யாக வாழுகிறது. சிவாஜியின் கூரிய வாளைவிட புத்தரின் சாந்தப் புன்னகைக்குச் சக்தி அதிகம். கலிங்கப் போர் வீரனான குலோத்துங்கன் ஈட்டியைவிட வள்ளலாரின் அருட்பாவிற்குச் சக்தி அதிகம். மூளை வலிவால் முரட்டு விலங்குகளை மனிதன் அடக்குகிறான். மூளையைவிட புத்திபலம் அதிகம்; அதைவிட ஆத்மபலம் ஆயிரம் மடங்கு அதிகம்.

அன்பு!

சு. பா.

# 18. மஹாத்மா

அன்ப,

மஹாத்மா வடநாட்டாரில்லை; தென்னாட்டாரில்லை; மகாத்மா உலகாத்மா; உலகப் பெரியார். இந்த நூற்றாண்டில் செயற்கரிய செயல்களைச் செய்தவர் நமது காந்தியடிகள். இன்று இந்தியாவே மஹாத்மாதான். அவர் வரவால் சென்னை புனிதமுற்றது. மஹாத்மா எதைத் தொடங்கினாலும் பொது மக்களின் உள்ளத்தைத் தொட்டுச் செயலெழுச்சி தந்து, எடுத்த வினையை முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர். அவர் முகப் பொலிவும், அகப் பொலிவும், மாசற்ற புன்னகையும், தேசுற்ற வாழ்வும், அமைதியில் பூத்த மணிமொழியும் இந்தியரைமட்டுமன்று உலகோர் உள்ளத்தையே கொள்ளைகொண்டன. நாடோறும் பதினாயிரக்கணக்கான மக்களுக்குக் கடவுளன்பும், நாட்டன்பும், தொண்டுணர்வும், தூயவாழ்வும் பயின்று காட்டி விளக்கும் மஹாத்மாவின் செயல் வணக்கமுடன் போற்றத்தக்கது.

மஹாத்மாவை 1916-ம் ஆண்டு முதல் அறியவாய்ப்புக் கிடைத்தது. மதுரை ஜார்ஜ் ஜோஸப் வீட்டிலேதான் அவரை முதன் முதல் கண்டேன். அவர் தென்னாப்பிரிக்காவில் தமக்குத் துணைசெய்த நாகப்பன் வள்ளியம்மை என்னும் இருவர் தியாகங்களையும் பற்றி சிற்சில

தமிழ்மொழிகளும் கலந்து பேசினர். அப்போது மஹாத்மா அசல் பனியா போல உடையணிந்திருந்தார்—தலையில் பெரிய பகடி—1919-ம் ஆண்டு மீண்டும் அவரைப்பார்த்தேன். அந்த எளிய சக்திச்சுடர் எனக்கு வழிகாட்டியது. என் ஆசிரியர் வேலையை உதறித்தள்ளி மஹாத்மா வழியிற் சென்றேன்—அது என்னை ஸ்ரீ ரமண மஹரிஷிகளிடம் நடத்தி ஸ்ரீ அரவிந்தரிடம் கொண்டு சேர்த்தது.

ஒருதரம் பார்த்தாலும் மறக்கமுடியாத பெரியார் மஹாத்மா. எந்தத்துறையிலும் எந்தப் பகுதியிலும் மஹாத்மா மஹாத்மாவாகவே காண்பார்—

மஹாத்மா வாழ்க!

## 19. ஹிந்துஸ்தானி

அன்ப, ஆங்கிலத்திற்கே அடிமைப்பட்டு, தாய் மொழிகளை மறந்த இந்திய நாட்டிற்கு மஹாத்மா தனிப்பெருந் தாய்மொழி—ஒன்றைத் தந்தார். ஹிந்தி வெகு எளிது; இந்தியா முழுதும் இந்தி அறியும். அது தேச பாஷையாயிருக்கத் தகுந்தது. மஹாத்மா வந்ததும் ஹிந்திக்கு எவ்வளவு ஊக்கம்! எத்தனை ஆயிரம் பேர் ஹிந்தி கற்கிறார்கள்.

மஹாத்மா மாகாண மொழிகளையும் ஹிந்திக்கு நிகராக வளர்க்கச் சொல்லுகிறார். தமிழர்களைத் தமிழில் பேசச் சொல்லுகிறார். தாமும் கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசுகிறார்.

மஹாத்மா வரவால் தியாகராய நகரே ஹிந்துஸ்தான் நகராய் விட்டது.

இப்படி ஹிந்தி காட்டுத்தீ போலப் பரவுவதைக் கண்டு சில தனித் தமிழர் ஏங்குவது இயல்புதான்; ஏங்கலாம், ஆனல் தூங்குவது இயல்பாகக் கூடாது. தமிழுக்கும் இப்படிப்பரவ உரிமையுண்டு; ஆனல், தமிழர் உறங்கி விட்டனர். ஹிந்தியை விடத் தமிழ் எளிது;

முப்பதெழுத்துக்களில் முற்ற முடிந்த முதன்மொழி நமது தமிழ். தமிழ் சென்னையைத்தாண்டிச் செல்லாமல் குறுகிவருவதன் காரணத்தை ஆராயவேண்டும்.

தமிழரிடையே முதலில் வேண்டுவது ஒற்றுமை; வகுப்புணர்ச்சி அறவே ஒழிந்து தமிழுள்ளம் எல்லாரையும் அன்பினால் தழுவி முன்னேறவேண்டும். அவன் வேண்டாம், இவன் வேண்டாம் என்ற குறுகிய எண்ணங்களே கூடா. எல்லாரும் வேண்டும், எல்லாரும் எம்மவர் என்ற விரிவான உள்ளுணர்ச்சி வேண்டும். மனவிசாலமே இனவிசாலம். தமிழே இனிது, தமிழே பெரிது என்று சும்மா தம்பட்டம் அடிப்பதிற்பயனில்லை. தற்காலக்கலைவளர்ச்சியையும் தமிழையும் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரந்தான். சங்க இலக்கியங்களும், கம்பனும், திருமுறை நூல்களும், அருட்பாவும் உள்ளன; ஆனால் இவை போதா. கன்னிமோரா புத்தக சாலையிற் சென்று பார்; தமிழின் வளம் எவ்வளவு? தற்கால மொழியான ஆங்கிலத்தின் கலைவளம் எவ்வளவு என்பதை அறிவாய். சுற்றிச்சுற்றிப்பார்க்கப் போனால் தமிழில் கதையுண்டு, கவிதையுண்டு, இசையுண்டு; அவ்வளவுதான்; ஹிந்தியில் நவீன இலக்கியங்கள் கடலாகப் பெருகிவருகின்றன. ஆனால் பௌதிகம், ரசாயனம்; கணிதம், பூகோளம், தாவரம், உயிர்நூல் முதலிய ஏராளமான கலைநூல்களை நாம் உண்டாக்கவேண்டும். பத்து லட்ச ரூபாயும் அமைதியாக இருபதாண்டுகள் தவமிருந்து பணி செய்ய வசதியான இடமும், ஆயிரம் அறிவுத்தொண்டரும் கிடைத்தால் தமிழ் ஆங்கிலத்தை வெல்லும் உலகமொழியாகும்படியான அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலாம் அருள் வளம் உண்டு; பொருள் வளம் வேண்டும்; தொண்டுள்ளது, தொண்டர் வேண்டும்; வழியுள்ளது; வலிமை வேண்டும்; தமிழுக்குத் திறமையுண்டு; தமிழருக்குத் திறமை வேண்டும்.

பிரிவினைப்பித்தம் ஒழிந்து திருவினை புரிந்து அறிவினை வளர்த்து, தமிழர் ஆளாகவேண்டும். இலக்கியம்

மட்டும் போதாது. தொழில், வாணிகம், அரசியல் முதலிய எல்லாத் துறைகளிலும் தமிழர் வளம்பெற வேண்டும். தமிழ் நாடும் தமிழ்ச் செல்வமும், தமிழர் வாழ்வும் தமிழ்—நிறைவாகவேண்டும். அதுவேவெற்றிக்கு வழியாகும். தமிழர் தமிழில் முழுக்கருத்தூன்றுவதுடன் தேசபாஷையான இந்துஸ்தானியும் கற்றல் நலம். இப்போது ஆங்கிலந் தெரியாத் தமிழர்போல் இனி இந்தி தெரியாத் தமிழர் நிலையாகும். காலத்திற்கேற்ற நலத்தைக் கருத்துடன் பயிலவேண்டும். எதிலும் சோடை போகக்கூடாது. எத்துறையிலும் சித்தி பெற வேண்டும்.

## 20. பாரதியார்

அன்புப் பழம்,

பட்டி மன்றம் பாரதியார் திருநாளைக்கொண்டாடுவது தகவே. பாரதியார் கவிமின்சாரம். அந்த மின் சாரமே புதிய தமிழ் உலகை இயக்கும் சக்தி.

கவிக்குயில் பாரதியார் தமிழகத்தில் புதிய வசந்தத்தைக் கொணர்ந்தார். அவர் பாடல்கள் நமது சமுதாய சக்தியை எழுப்பிப் புதுவாழ்வைத்தந்த மின்சாரம்.

பாரதி பாடல்களை இன்று போற்றி முழக்கும் தமிழர் வாழ்க! கவிகளைப் போற்றலே கலைகளைக் காத்தலாம்.

தங்கள் தங்கை ஆனந்தி ஆனந்தமாய் பாரதிப் பாடல்களை ஆடுக-பாடுக. நன்று.

பாடுவோரும் பாரதியைப் பாரதியில்—பா வெறியில்
ஆடுவோம் ஆண்பெண் அடங்கலுமே — நாடுயரக்
கட்டற்ற தெய்வக் கலைவெற்றி நாட்டிடுவோம்
எட்டெட்டுத் திக்கும் இனிது.

## 21 மீசை முறுக்கடா!

மீசை முறுக்கி எழுந்திரடா
வீரத் தமிழா! உலகினிலே
ஆசை கொண்ட பொருளெல்லாம்
அடைந்து வாழ்வை அனுபவிப்பாய் (மீசை)
எவருக்கும் நீ அஞ்சாதே
யாருக்கும் நீ தாழ்வில்லை
நவ பாரதத்தின் நாயகனே
நடமுன் வெற்றித் தெம்புடனே! (மீசை)
ஆண்மை ஆண்மை என்றிடுவாய்;
அடிமை வாழ்வைத் தூவென்பாய்
கேண்மை பெருகக் கிளைபெருகக்
கீர்த்தி யுடனே வாழ்ந்திடுவாய் (மீசை)
அந்நிய மாயப் பேயினைநீ
அடித்து விரட்டித் தலைநிமிர்வாய்
தன்மதிப் புடனே கர்ஜனைசெய்
தமிழன் சக்தித் தணலெனவே (மீசை)
வீரத்தமிழர் மீசை முறுக்கி எழுக! தலைழுக! வெல்க
எந்தாய் வாழ்க.

அன்பு,

சு. பா.

## 22. வாழ்வு

**அன்புப் பழம் வாழ்க! வளமும் நலமும்,**

'வாழ்வு' என்றால், வாழ்க்கை நலம், உயிர்ச் செழிப்பு, மங்கலம் எனப் பொருளாம். வாழ்வைக் கருதும் மனித னுக்கு வாழ்வுத்துணை நலமான மனைவி வேண்டும். நற் குணங்களையே அணியாகக்கொண்ட நல்லாள் இயல்பாக உன்னைக் காதலித்தால் மணம் புரிந்துக்கொள்க! புண் படாப் பேச்சு, பொறுமை, நன்னடை, அணிச்செருக்கும்,

அழகுச் செருக்கும் — இளமைச் செருக்கும் இன்மை; அடக்கம், அமைதி, சீர்மை, நேர்மை—இவையெல்லாம் நாணமாவன. தூயகற்பு, வாய்மை, அன்பு, உள்ளக் கலப்பு, உயர்சிந்தை, மென்மை, இனிமை, இடம்பமின்மை, மட்டு மரியாதை, மங்கல மனையை வகிக்குந் திறமை, கணவனே உயிரெனக் கருதுங் கற்பு, கல்வியறிவு, இல்லறப் பயிற்சி- இவையெலாம் பெண்ணுக்குப் பெருமை தரும் சிறந்த தன்மைகளாகும். குணவதியுடனே கூடிவாழ்க!

**மணமகளுக்கு:**

புன்னகை முகமும், மென்மையும், அன்ன நடையும், அமுத மொழியும், கிளியினழகும், குயிலினிசையும், கடலே யனைய கருணைவிழியும், கார்போற் கூந்தலும், பேய் மத மற்ற தூயகாதலும், பிரியாநேயமும் பெண்மைக் கழகாம் வீட்டைப் பெருக்கிக் கோலம் போடல், அழகு செய் தல், மகான்கள் படத்தை அலங்கரித்தல், மலரணி செய் தல், தேய்ப்பது தேய்த்தல், தோய்ப்பது தோய்த்தல், உலர்த்துவ துலர்த்தல், குறித்தவிடத்திற் குறித்ததை வைத்தல், பழகும் பொருளெலாம் பாங்காய் அடுக்கல், மூன்று வேளையும் முறையாய்ச் சமைத்தல், கணவன் மகிழக் கனிவுடன் சோறிடல், பிள்ளைகள், நாளும்பெரியவ ராகப் பாட்டும், கதையும் பரிவுடன் சொல்லல், திருவிளக் கேற்றித் தெய்வம் வணங்கல், உள்ளமுருகக் கடவுளைப் பாடல், எல்லாவுயிர்களும் இன்புறவேண்டல், அளவுட னருந்தல், அளவுடனுறங்கல், வந்த விருந்தை முகமலர்ந் தேற்றல், ஏழை எளியவர்க்கு இயன்றதைத் தருதல், வரவிற்கேற்ற செலவு செய்தல், அன்பையும், அறிவை யும், அறத்தையும் வளர்த்தல், உயிர் நலம் பேணல், உடல் நலம் பேணல், மனநலம்பேணல், மக்கள் நலம் பேணல்—இவை மங்கல மனைவியின் கடமைகளாகும். இத்தகைய பத்தினியைச் சக்தி எனப் பணிவோம்.

**வினையுலகை யஞ்சாதீ வீரன்போல் வெல்க,**
**மனவுறுதியாலே மகிழ்ந்து!**

# 23. ஒளியும் ஒழுக்கமும்

அன்புப் பழம்நீ, இறைவன் நலமருள்க !

முறையான நல்லொழுக்க வாழ்வினால் உள்ளம் ஒளி பெறும்; அகத்தொளி முகத்தில் விளங்கும். மனங்கோண முகங்கோணும்; மனம் மலர முகம் மலரும். காமம் வெகுளி கலக்கமற்ற தூயமனம் மாசற்ற கண்ணாடியைப் போன்றதாம். அதனூடு ஆன்மவொளி நிலவும். அவ் வொளிக்கதிரே, தேஜஸ், ஓஜஸ், வர்ச்சஸ், எழில், சாந்தி எனப்படுவது.

ஆள் அண்டங்காக்கையா யிருந்தாலும், இந்த ஆத்மதேஜஸால் ஒருவன் புதிய அழகும், பொலிவும் பெறுவான். வெறுந் தோலழகிற்கும் இதற்கும் வேற்றுமை யுண்டு. சாயம்பூசி, பொய்ப்பல் நகைத்து, அணி மணிமினுக்கும் மேழைகு போலியழகே. அணிமணியின்றி விண்மணி யொளிர்வதுபோல, உள்ளழகு மேலழகின்றியே பொலியும்.

தெய்வநிந்தனை செய்யாமல், தெய்வத்தன்மையுள்ள பெரியாரை எதிர்த்து வாதாடாமல், பொய் சொல்லாமல் நடந்தால் ஒருவனுக்குப் புகழாகும். ஒவ்வொரு நாளும் இரவில் படுக்குமுன்பு, அன்று செய்த குற்றத்தை நினைத்து வருந்தி, மனச்சாட்சியான தரும தேவதையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். காலையில், அக் குற்றத்தைச் செய்வதில்லை என்ற உறுதியுடன் மாசற்றவனாக எழுந்திருக்க வேண்டும். நன்னடை வளர்க்கும் வழியிதுவே. மனிதன் சுரங்கக்கட்டி; அதை மாற்றுயர்ந்த தங்கக் கட்டியாக்க வேண்டும். அதற்கு அதை நல்லொழுக்கம் என்னும் உலையில் உருக்கியுருக்கித் தூய்மையாக்க வேண்டும்.

இந்த எண்சாண் மனையில் எத்தனையோ குறைகளும், பிணிகளும் குடிப்புகுந்துள்ளன. தன்னலம், வஞ்சனை, ஆசை, ஆணவம், அழுக்காறு, பொய், பகை, காமக்

குரோதாதிகள் முதலிய ஆயிரக்கணக்கான குற்றங் குறைகள் நிறைந்த இந்த மானிட வாழ்வை நாடோறும் மாசறுக்கவேண்டும். ஒழுக்கமென்னும் உளியாற் செதுக்கியே உயிரோவியத்தை ஒளிபெறப் பொலிவிக்க வேண்டும். நாட் குறிப்புகள் எழுதி வருக! கண்விழித்தெழுந்தது முதல் கண்மூடி யுறங்குமட்டும் செய்தவை, நினைத்தவை, சொன்னவைகளில் உள்ள நன்மை தீமைகளை யெல்லாம் எழுதி வருக!

'இன்று, இன்ன குற்றம் செய்துவிட்டோம். ஏன் செய்தோம்?சை, நாளை அப்படி செய்யக்கூடாது' என்று உறுதி கொள்ளவேண்டும். இன்று ஒருவர்மேல் பொய்கட்டிவிட்டிருந்தால், இரவில் வருந்தி, மறுநாள் யார்மேல் பொய் கட்டிவிட்டோமோ அவரிடம் சென்று, 'நேற்று நான் இன்னபிழை செய்துவிட்டேன்; மன்னிக்க வேண்டும்; இனிக் கவனமாக நடந்து கொள்ளுகிறேன்' என்று தைரியமாகச் சொல்ல வேண்டும். அதனால் இருவருக்கும் நட்பாகும், குற்றங் குறையும். மறைத்த குற்றம் மனத்திற் குடையும். ஒப்புக்கொண்டவன் தப்பிக்கொண்டவன். மனமாகிய செப்புப் பாத்திரத்தைக் களிம்புப் பிடிக்காமல் தினம் தூயவொழுக்கங்களால் தேய்த்துக் கொண்டே யிருக்கவேண்டும்.

**காலைக் கடன்களைக் கருத்துடன் செய்க**

முகத்தில் விளங்கும் முறையான வாழ்வால்
அகத்தொளிரு மான்ம வழகு.

அன்பு.
சு. பா.

# 24. சாதி இறுமாப்பு

அன்பு மணியே,

என் விழிகளில் சாதி மத வேறுபாடே கிடையாது; சாதி மதங்கள் மனவிகாரக் கட்டுமானங்களே; பிராமணன் என்று நான் யாருக்கும் தனிச் சலுகை காட்டியதில்லை; மற்றச் சாதி என்று ஒதுக்கியதும் இல்லை. நான் எங்கிருந்தாலும் எனக்குத் துணை நிற்பவர் தமிழரே; தமிழர் என்ற ஒரே இனத்தைத்தான் நான் ஒப்புவேன். சாதி யிறுமாப்பால் ஒருவரை யொருவர் திட்டுவதும் தாக்குவதும் தற்கொலையாகும். அது பிராமண இறுமாப்பானாலும் சரி, அப்ராமண இறுமாப்பானாலும் சரி இறுமாப்பு வெறுக்கத் தக்கது. உள்ளன்புள்ள இடம் என் உள்ளமும் இருக்கும். உள்ளன்புடன் கேட்டு, நல்லமுறையில் வெளியிட்டுப் பொது நலம் புரியும் சிலருக்கு எனது நூல்களைத் தருகிறேன். அவனுக்குத் தராதே இவனுக்குத் தராதே என்று என்னை அதிகாரம் செய்து என்கலையைத் தங்களுக்கே அடிமையாக்கும் சூழ்ச்சியை நான் ஆதரிக்க முடியாது. கொடுத்ததைக் கருத்துடன் , பயன் படுத்துகிறவன் அந்தணனானாலும் சரி, வேளாளனானாலும் சரி, இஸ்லாமியனானாலும் சரி, கிறிஸ்துவனானாலும் சரி என் அன்பு அவன்பால் இருக்கும். உள்ளன்பில்லாமல் சுயநலங்கருதி எழுத்தாளரை வஞ்சிப்பவருக்கு நான் இணங்கினல், என்வாழ்வின் குறிக்கோளையே நான் இழந்ததாகும். அறிவு மூட்டையில் உறங்கக்கூடாது. அதை அக்கரையுடன் பரப்புவோருக்கு எவ்வளவு வேண்டுமானாலும் தரத்தயார். அன்பு, கருத்து, ஆர்வம், தூயசிந்தனை, செருக்கில்லாத நேர்மை, வசையில்லாத இன்சொல், **கடவுளன்பு, பெரியாரிடம் வணக்கம்**—இவற்றைப் பார்த்தே நான் ஆட்களை மதிப்பிடுவது — இதை நன்ருக அறிந்தால் ஐயம் நீங்கும்.

# 25. நோய்

அன்பு மணியே,

நோயில்லாது நூறாண்டு வாழ வழியுண்டு; மனப் பேயின் சேட்டைகளே நோயுருவெடுத்து உடலையும் வருத்துகின்றன. உடலுறுதிக்கு மனவுறுதி வேண்டும்; ஹல்வாவும் மைசூர்ப்பாகுமாகத் தின்றுத் தீர்ப்பதனால் உடலுறுதி வராது. ஊனுண்பது உடலுக்குறுதி என்று பலர் இரத்தவுணவை நாடுகின்றனர் — இது கொடிய பாவம். மனிதனுக்குத் தூயகனி, கடலை, பால், பருப்பு தானியங்கள், கீரைகள், காய்கறி கிழங்குகள்—இவையே சிறந்த உணவாகும். ஊனைவிட உளுந்தில் பலம் அதிகம் வரும். தூயசிந்தையுடன் பசியறிந்து தூயுணவுண்டால் அது நன்றாகச் செரித்து இரத்தத்திற் கலந்து, உடம்பு உறுதிபெறும். எவ்வளவு கொழுமையான உணவுண்டா லும் மனம் அடங்காவிட்டால் உடல் உரம் பெறாது. மனப் பிணியே உடற்பிணி, உடற்பிணியே மனப்பிணி. மனதில் அழுக்கு வைத்துக்கொண்டு உடம்மை நகாசு செய்வது, உடம்பு குளிக்காமல், கால்கூடக் கழுவாமல் அழகான உடுப்புகளை மாட்டிக்கொள்வது போலாகும். இது பார் வைக்கு முறுக்காயிருக்கும். உள்ளே நாறும். உள்ளும் புறமும் தூய்மையா யிருப்பதுதான் நல்வழி.

மனங் கெடுவது புலன்களால். புலன்கள் மனதைப் புறத்தே இழுத்து, மயக்கிச் சீரழித்து அமைதியைக் கெடுக்கின்றன. மனம் பூமணத் தென்றல்போல் அமைதி யாக ஓடினால் நல்லது. மனவெறியான சண்டமாருதப் புயல் வீசினால் வாழ்வுப் படகு கவலைப் பாறையில் மொத் துண்டு பக்குவிடும். மனதிற்குப் புயல் புறத்தினின்றே வீசுகிறது. பகுத்தறிவைக் காவலாகவைத்து, புறத்தி னின்று வரும் தீமைகளை உடனுடன் "போ, வராதே பேயே" என்று விரட்டியடி; பெருந்தீனி, பெருந்துயில், கடுஞ்சினம், வஞ்சம், சூது, பிறரைக் கெடுக்கும் சூழ்ச்சி, முன்னால் இனிமையாகப் பேசிப் பின்னால் வெடிவைக்கும்

ஐயாகோத்தனம் (Iagoism) பேராசை, அகம்பாவத்திமிர், பேய்க்காமம், பொறாமைத்தீ—இவை மனதைப் பாழாக்கி, மனிதனைப் பேயாக்கி, உடம்பை நோயாக்கி, வாழ்வைத் துயரப் பிண்டமாக்கும். இதுதான் திருவற்ற வாழ்வு, குடலழுக்கு உடலழுக்கு இவை மனவழுக்குமாகும். குடலும் உடலும், உணவும், உடையும், காற்றும், சிந்தையும், சொல்லும், செயலும் தூய்மையானால் வாழ்வும் இன்புறும். அளவறிந்துண்; அறிந்து பேசு, அளவுடன் பயன்படச் செய். அளவறிந்து பழகு—நலமுறுவாய்.

அன்பு,

# 26. பைத்தியம்

அன்பர,

பைத்தியம் பலவிதம்; பின் மூளை நரம்புகள் பிசகிப் பைத்தியம் பிடிக்கிறது. பின் மூளையில் பெருஞ்சுரப்பி (Pituitory gland) உள்ளது. அது வறண்டு சத்தற்றுப் போனால் சித்தம் பிசகும். அத்துடன் பித்தம் அதிகமாகும். தலைசுழலும், வாய் உளறும், பைத்தியம் பலவகை. காரியமில்லாமல் சும்மா வந்ததையும் போனதையும் புரட்டிப் புரட்டிப் பேசுதல், தலையரட்டை, விஷயமில்லாமல் வதவதவென்று எழுதல், ஆத்திரங்கொண்ட வசைபுராணம், வெறுப்பினால் நல்லோரைத் தூற்றித் திரிதல், பிறர்குற்றமே பேசுதல், முன் கோபத்தினால் பிறர்மேல் பாய்தல், காமவெறியால் கண்ட நாற்றத்தில் விழுதல், பொறாமையால் பொருபொருத்தல், பேராசையால் பிறர் சொத்தைக் கவர்தல், ஏதாவது ஒரு குறையைப் பிடித்துச் சும்மா வாய்க்கயிறு திரித்தல்—எல்லாம் நடை பிசகிய பைத்தியமே. இதற்கு வாய் மௌனம், தனிமை, சாதுசங்கம், விரதம் — இவை மருந்தாகும்.

**மூளைப் பைத்தியத்திற்கு மாற்று:—**

நல்ல வெயிலில் வேர்க்க வேர்க்க உலாவுக; உடனே பெரிய நீர்த்தடத்தில் நீந்திக் குளிக்கவும். அல்லது ஒரு

தொட்டியில் நீர் நிரப்பி அரைமணி நேரம் மல்லாந்து படுத்து, அடிவயிற்றை நன்றாகத் தடவிப் பிசைந்து குடலழுக்குகள் கீழே போய்க் குவியும்படி செய்க. பிறகு தலையில் எலுமிச்சம்பழம் தேய்த்துத் தண்ணீரை நிரம்ப ஊற்றிக் குளிக்கவும். இப்படி நீராடித் துடைத்துக்கொண்டதும் அகிற்புகையில் தலையையும், உடலையும் ஐந்து நிமிஷம் காட்டுக. பிறகு நல்ல அருட்பாடல்களைப் பாடி மௌனமாகக் கேட்கச் சொல்லுக நோயாளியும் பாடுவதானல் தெளிவாகப் பாடலாம். இந்தப் பயிற்சி சித்தந் தெளிவிக்கும். பசி கண்டதும் நல்ல கனிகளைத் துய்த்து, வில்வம், துளசி, வேப்பம்பூ, கொத்துமல்லிவிதை, நாரத்தம் இலை, இஞ்சி இவை ஒவ்வொரு பிடி போட்டுக் காய்ச்சிக் கஷாயம் வடித்துப் பால்விட்டுப் பனங்கற்கண்டு சேர்த்துச் சாப்பிடச் சொல்லுக. வேறுணவு கூடாது. அல்லது நார்த்தை, ஆரஞ்சு, எலுமிச்சம்பழம், மாதுளம்பழம்—இவற்றின் சாற்றில் இஞ்சியும் நாட்டுச் சீனியும் சேர்த்துப் பருகுதல் நல்லது. காலை மாலை இந்த உணவு போதும். மதியம் பசித்தால் சோறு, கூட்டு, கொத்தமல்லிப் பச்சடி, மோருடன் உண்ணலாம். சுக்கு-வெந்நீர் பருகுக; காற்றும் கதிரும்பட வாழ்க—அடிக்கடி மலைகளுக்குச் சென்று வரலாம். திருத்தலம் புகலாம். குற்றால அருவியாடலாம்.

காசத்திற்கும் கழுகுமலை, மதனபல்லி போன்ற இடத்தில் வாசம் செய்தல் நலம். கதிர்முழுக்கு; கனியுணவு சித்தரத்தை—வெந்நீர், மனவமைதி—இவை மாற்றும். தூதுளை—கண்டங்கத்திரி—நாய்க்கடுகு, தேசாவரம்-இவற்றைக் கஷாயமாக்கிக் காலை மாலை பருகலாம்.

நன்னீர், நற்காற்று, நல்லுணவு, நன்னினைவு—இவையே இயற்கையான மருந்துகளாம். இயற்கை எல்லையற்ற மருத்துவச்சாலை—அதைப் பயன்படுத்தத் தெரிந்தால்—நோயில்லை, துயரில்லை.

அன்பு.

## 27. இளமை

அன்புப் பழம் நீ,

பசுப்போன்ற அடக்கமும், சிங்கம் போன்ற வீறும் யானை போன்ற உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

புக்கர் வாஷிங்டன் போன்ற சமுதாயப் பணியும், மகாத்மாபோன்ற சத்திய வாழ்வும் வேண்டும்.

இளமையென்பது ஒருகரடு முரடான தோட்டம். அதில் பூங்குயில்களும் அகவும், முரட்டுப்புலிகளும் உருமும். இளமையின் ரோஜாவில் முட்கள் அதிகம். காமப்புயல்களும், படபடப்பும் துடிதுடிப்பும் இளமையின் யாத்திரையைத் தடுத்தலைக்கும். ஆதலால் மிகவும் கவனமாக, நிதானமாக, அமைதியாகப் பயன்பார்த்து, நயம் பார்த்து செய்வன செய்து வாழ்வை ஒழுங்குறுத்த வேண்டும். அவரவர் மனவுறுதியே வாழ்க்கைச் சிலையை வடிக்கும் சிற்றுளி. வாழ்வுக்கலை சுத்தசன்மார்க்கத்தில் உள்ளது. அதைக் கற்று, உளிப்பிடித்துத் தங்கள் வாழ்வை உண்மையான வீரச்சிலையாக்குக! துணிவியாபாரம் நல்ல தொழில். சுதேசத்துணி விற்றால் புண்ணியம். தொழிலால் பொருள் செய்; பொருளால் புண்ணியம் செய்!

அன்பு,
சுத்தானந்தம்.

## 28. கூற்றிற்கஞ்சேல்

அன்புப்பழம்,

பிறந்தபோது எப்பொருளையும் கொண்டுவருவதில்லை. இடையே எத்தனையோ செல்வச்சிறப்புகள் வருகின்றன. முடிவில் எதையும் கொண்டுபோக நமக்குச்சுதந்தரமோ, நினைப்போ, ஆற்றலோ இல்லை. உடல் மண்ணாகிறது. ஜீவன் அந்தக்கரணங்களில் அடைபட்ட சங்கற்பவிகற்

பங்களுடனும், பாபபுண்ணியங்களுடனும், பிரிந்துசென்று வேறு உடலிற் புகுந்துறைகின்றது. கண்முன் உள்ள வாழ்வை நாம் நன்கு பயன்படுத்தி ஜன்மசாபல்யம் பெற வேண்டும். நமது வாழ்க்கை ஊர்நடுவே செழிக்கும் ஒரு கனிமரம் போலிருக்கவேண்டும. ஒருமாமரம் அருந்துவது பூசாரமும் நீருமே அது நமக்கு அளிப்பதோ, இனிப்பான பொன்னிறக் கனிகளாகும். மாந்தரும் உலகன்னைதரும் உணவை உண்கிறார்கள். அதற்குப் பதிலாகத் தம் ஊழியத்தாலும், பொது நலத்தாலும், உலகம் இன்புற வாழவேண்டும். வாழ்வென்னும் மாமரத்தில் புண்ணியக் கனிகள் குலுங்கவேண்டும். இந்த மரத்தை நமனார் ஒரு நாள் வந்து வெட்டி விடுவார். நிற்குமட்டும் நற்கனி கொடுத்து, அழைப்பு வரும்போது பேசாமற் போய்ச்சேர வேண்டும்.

பிறப்பும், சிறப்பும் உடலுக்கு இயல்பென்றுணர்ந்து கலங்காதிருக்கவேண்டும்; நம்மதென்று எதையும் பூட்டி வைத்துக் கருமித்தனம் செய்யாமல் எல்லோருக்கும் தாராளமாகத்தரவேண்டும்—பொருள்வேண்டும்; பொருள் தொழில் விரிவாக வேண்டும். உலகில் பூரணஞானிகள் ஓங்குக! உயிர்களுக்கெல்லாம் எல்லா நலங்களும் ஓங்குக! எல்லோரும் ஓர் அருட்குலமாகி இன்புற்று வாழ்க! ஓம் சுத்த சக்தி!

அன்பு, அமைதி, அருளின்பம்.

அன்பு,
சுத்தானந்தம்.

## 29. புதுமை

**அன்புப் பழம்,**

காலவெள்ளம் முன்செல்லுகிறது அதிற்புது ஊற்று அருவிகள் வந்து சேர்கின்றன. **பழையதேகத்திலேயே பாசி பிடித்தலேயேல்!**

'இது பழைய வழக்கம், பழைய ஆசாரம், முன்னோர் வகுத்தது' என்று திருப்பித்திருப்பி பல்லவி பாடிக் கொண்டு கால முன்னேற்றத்தின் குறுக்கே நில்லாதே. 'புதுமை, புதுமை, புதுவாழ்வு, புதுநினைப்பு, புதியசுயேச்சை **வேண்டும்**' என்று சொல்லி முன்னேறிச் செல்.

**அன்பா,**

'ஏதடா சங்கடம், இந்தக் காரியம் நிறைவேறாது போலிருக்கிறதே! இதற்கு இத்தனை எதிர்ப்பிருக்கிறதே; நாம் என்ன செய்யமுடியும்?' என்று முதலில்தோன்றும், மனந் தளரக்கூடாது.

உலகில் நடக்கும் திருவினைகள், அருட்பணிகள் பொது நலத்தொண்டுகள்—எல்லாம் முதலில் வருத்தமாகத் தோன்றி, இறுதியில் வெற்றிபெறும். இருள்முதிர முதிரப்பகல் அருகேவந்து சுடர் எழுகின்றதல்லவா? அரிய பெரிய அருட்பணிகளுக்கு ஆயிரம் இடர்கள் வரும். அறியா மக்கள் நகைப்பர்; இன்னலிழைப்பர்; மனந்தளரும் படியான தோல்விகள் வரும். எனினும், மனத்திட்பங் கொண்டு செய்யும் திருவினைகள் வெல்லும். இடர்களெல்லாம் இரவின் இருளைப்போல் படிப்படியாக விலகி, வெற்றிக்கதிர் உதயமாகும். **மகாத்மா காந்தி** தென்னாப்பிரிக்காவில் உயிருக்கே ஆபத்தான நிலையிலிருந்துக் கொண்டு, கன்னத்தில் அறைபட்டும், பல்லுடைபட்டும், சிறையுண்டும், பொறுமையாகத் தமது கொள்கையைக் கடைப்பிடித்தார். இன்று, அவரது சத்தியாக்கிரக சக்தி பாரத நாட்டையே உய்வித்தது. உலகில் அரிய பெரிய பொது நலங்களைச் செய்த பலமகான்கள், மலர் மெத்தைமீது நடக்கவில்லை; அவர்கள் காரியம் அவ்வளவு எளிதாக நிறைவேறி விடவில்லை; அவர்கள் பகைவரின் வாள்மேல் நடந்தே, பொறுமையும், தன்னம்பிக்கையும் கொண்டு எடுத்த வினையை முடித்தனர்.

சத்திய வழிபிடித்து, தைரியமாக முன் செல்க! துயர்க்குலங்கள் வரும்; அனைத்தையும் பொறுத்து மேன்

மேலும் காரிய வுறுதி கொண்டு வெல்க, முடிவில் நமக்கு வந்த இடர்கள் பணிந்து வெற்றிக்கே படிகளாக வுதவும்.

அன்பு,
சுத்தானந்தம்.

## 30. நாடகக் கலை

அன்புப் பழம்,

தாய்மொழியைப் பொன்போல் அருமையாய்ப் போற்றி வளர்க்கவும். பிற மொழிகளில்உள்ள நயங்களைக் கண்டு அவற்றைத் தக்கபடிச் சேர்த்து நாடோறும் தாய் மொழிக்கு எழில், ஒளி மாற்று ஏற்றுக!

புட்டிப் பாலுக்கும், தாய்ப் பாலுக்கும் எவ்வளவு வேறுபாடோ அவ்வளவு வேறுபாடு பிறமொழியால் அறிவு பெறுதற்கும் தாய்மொழி மூலம் அறிவு வளர்ப்ப தற்கும் உண்டு. ஒவ்வொருவனும் தன் சொந்தப் பற்களை யும், இரைப்பையையுங் கொண்டே உணவைச் சீரணிப்பது போலவே, தாய் மொழியைக் கொண்டே அறிவைத் தனதாக்கிக் கொள்ளவேண்டும். பிற மொழியைத் திறமுடன் பேசினும் அம்மொழிக் குரியார் போல அதிற் புலமை பெறுதல் அரிது. தாய் மொழி யிலே தான் ஒருவன் கலைகளை எளிதிற் கற்கமுடியும்.

தமிழைப் போற்றுமின்! தமிழே யமுதம்; தமிழே தாரகம். மொழிவளர்ச்சிக்கும், கலைவளர்ச்சிக்கும் நாடக மேடையும் திரைப்படமும் சாதனங்களாம். தமிழ் அழ காகப் பேசத்தக்கவர்கள்—நடித்தல்வேண்டும். சில திரை நடிகர் வாயில் தமிழே நுழைவதில்லை. ஜட்காவண்டி நடையே தமிழ் என்று சிலர் கூச்சலிடுகின்றார்கள்.

தமிழ்ப்படங்கள் ஆங்கிலப் படங்களும் வியக்கும்படி அழகாக விறு விறுப்பாக அமையவேண்டும். பொது மக்களுடன், தக்க பெரியார்களும் போற்றும்படியமைதல் வேண்டும்.

சில ரஷ்யப்பட இலக்கியங்கள் படித்தபிறகு தமிழ்ப் பட குறைகள் தெரிகின்றன.

காமக் களியாட்டம், கையாண்டிச் சிரிப்பு இரண்டு தவிர வேறு சுவைகளே படவுலகிற் புகாமல் இருப்பது வருந்தத்தக்கது. . . நவரசங்களும் தக்க முறையிற் கையாண்டால் கலையுணர்ச்சிப் பரவிப் பொலியும். கதைக்குச் சம்பந்தமில்லாமல் துடைப்பக் கட்டைத்தமாஷ்களே படத்தில் விளையாடுகின்றன. மோலியர் நாடகங்கள்போல நகைச்சுவையமைதல் வேண்டும் . . . ஷேக்ஸ்பியர் போல் உலகியல்பையும் நவரஸ உணர்வையும் காட்ட வேண்டும். காளிதாசன், கம்பன் போல் காதலும்வீரமும் இலகவேண்டும் . . . இளந்தமிழர் புதிய மேடையில் புதுயுக நாடகமாடுக!

அன்பு வாழ்க!

சு. பா.

# 31. நடித்தல்

திரு. பொ. பரமகுரு, M. A. அவர்கட்கு,

அன்புள்ள பரமா,

நடிப்புக்கலை அருங்கலை; உள்ளுணர்ந்து நடித்தால் உருக்கம் உண்டு.

நடிப்பில் மிதமிஞ்சிப்போனால் இயற்கைஅழகு போய் விடும்.

**நடிப்பவர் தன்மை** :—நல்லதேகக்கட்டு, உற்சாகம் கம்பீரமான உருவம், வசீகரத் தன்மை, புன்னகை, மணிக்குரல், நடிப்பிற்கேற்ற படிப்பு, பொருளறிவு, ஞாபகசக்தி, குறிப்பறிதல், சமயோசிதபுத்தி, தடையற்ற தெள்ளுரை, இடையே பேச்சுமறந்துவிழியாமை, எடுத்துக் கொடுப்போனை (Prompter) உடனே கவனித்தல், சபையில் விழிக்காமல் யுக்தியாகக் காலத்தை நிரப்பல், சிந்தனை சக்தி, வேஷத்தை இலக்கணப்படிப்பூணல், சபையை மகிழ்

வித்தல், சபைக் கூச்சமின்மை, தூயவொழுக்கம், கள் சுருட்டு, புகையிலை, கஞ்சா, விபசாரம், நாஸ்திகம் பிற மதநிந்தை, இவற்றை அறவே யொழித்தல், ப்ரம்ம சரியம் காத்தல், அடிக்கடி தனிமையில் நடித்துப் பார்த்தல், நல்லோர் சேர்க்கை, பிறமாதரைத் தாயெனக் கருதல், சுசிருசியான உணவு, விரதம், ஜபம், தியானம், மனோ வாக்கு காய சுத்தம், இடைவிடாத கலைவளர்ச்சி, பெருந்தன்மை, செருக்கின்மை, போட்டி பொறாமை யின்மை, நாடகக் கலையை ஒரு யோகசாதனமாகக் கருதல் முதலியவைகளே உயர்ந்த நடிகர்க்குரிய தன்மைகளாம். தனித்துப்பேசல் (Soliloquy), புறத்தே பேசல் (Side Speech) உரத்துப் பேசல், அதட்டிப்பேசல், நகைத்துப்பேசல், மனங்கவரப் பேசல், வெறுத்துப் பேசல், சினந்து பேசல், புணர்ந்துபேசல், இணங்கிப் பேசல், எதிர்த்துப்பேசல், களித்துப் பேசல், ஒளித்துப் பேசல், மழுப்பிப் பேசல், முதலியவற்றை இடத்திற் கேற்றபடி முகக்குறிப்பு, கைக்குறிப்பு, கண்குறிப்பு, நடைக் குறிப்புகளுடன் அளவாகப் பேசவேண்டும். நடிப்பில்லாப் பேச்சு மினுக்கில்லாத வைரம் போன்றது. பேச்சும் நடிப்பும் நாடகக்கலையின் உயிரிகள் (lungs); பாட்டு குரல்வளைபோலாம்.

ஜாதி விரோதம், மதவிரோதம் மனவருத்தம் இவற்றை மூட்டும்படியான வசை, குத்தல், கிண்டல், இடிப்புரை முதலியன நாடகமேடையில் வேண்டா. ஒற்றுமை, சமரஸம், நட்பு, நேயம், நல்லறிவு—இவை நமது கொள்கை.

உதவாப் பழக்க வழக்கத்தைப் பாட்டாலும், காட்சி களிடையே நயமான பேச்சாலும் மாந்தர்க்கு உணர்த்தி அதை ஒழிக்கும்படி தூண்டவேண்டும்.

காலிப்பேச்சுகளையும், கொச்சைப் பாட்டுகளையும், பெருந்தன்மையான நடிகர் விலக்கவேண்டும். சபையில் பகிரங்கமாகக் காதலர் ஆலிங்கனம் செய்வது பாங்கல்ல. உள்ள வுணர்ச்சியிருந்தால் நடிப்பு இயல்

0-, 4MSB, V
N47



பாக அமைவது நலம். இரசங்கள் ஒன்பதாக வகுக்கப் படினும், அவற்றுள் எத்தனையோ கிளைகளுள்ளன. முக்குணப்போராட்டமான வாழ்வில் ஆயிரக்கணக்கான மாற்றங்களும் விகாரங்களும் உள்ளன. அவற்றின் இயல்பு, காட்சி, இடம், காலம், செயலுக்கேற்ப உணர்வும், மொழியும், நடிப்பும் அமைதல் வேண்டும். உரையும், ஊறுப்பும் உட்பொருளை விளக்குதல் நடிப்பிற்கழகாம்.

கலை வளர்க! தமிழ் ஓங்குக! அன்பு பெருகுக!
தமிழர் தலை நிமிர்க! தமிழகம் பொலிக.

அன்பு.

சு. பா.

## 32. நகைச்சுவை

105782

கண்மணி,

நமது சமூக வாழ்வில் எண்ணிறந்த நகைச்சுவைக ளிருப்பதால், நமது சீர்திருத்த நாடகங்களில் தனியாக விதூஷகன் வேண்டியதில்லை. இப்போது நாகரிக நாடகங்களில் தனியான விதூஷகனுக்கு இடமில்லை.

தனியாக இடைக்காட்சிகளாக வேண்டுமெனின், அறிவு புகட்டும் பெருந்தன்மையான நகைச்சுவை மிக்க கதையும், பாட்டும் பேச்சும் வரலாம்.

நகைச்சுவை பகைச்சுவையாகாமல், யாரையும் புண் படுத்தாமல், இன்புறுத்துக. நகைச்சுவையே வாழ்விற்கு எழுச்சி தருவது; நகைச்சுவை யின்றேல் வாழ்க்கை சகாரா வனந்தரம்போ லிருக்கும். காதற் சுவைக்கு அடுத்தபடி வாழ்வை மகிழ்விப்பது நகைச் சுவையே. சிரிக்காமல் சிரிக்கவைப்பது நல்ல நகைச்சுவை.

சமுதாய ஊழல்களை நகைச்சுவையாக விளக்கிச் சீர்திருத்தம் செய்யலாம்.

ஆனல் சீர்திருத்தம் செய்வோரே நகைக்கிடமாயிருக்காமல் மாசற்ற ஒழுக்கமுடையவராயிருக்கவேண்டும். உன்னைத் திருத்தி ஊரைத்திருத்து, உலகைத் திருத்து ஒருவன் திருந்தினல் உலகில் 150 கோடியில் ஒருபங்கு திருந்தியதாகும். திருத்து முன்னே திருந்து. தன்னிழலே உலகம்.

திருந்து—திருத்து—செப்பி.

அன்பு

## 33. மணப் பெண்

அன்புப் பழம் நீ,

ஜாதகம் சாதகமாகவே இருக்கிறது. இந்தக் காலம் படித்த நாகரிகப் பெண்களைவிட வீட்டைப் பொறுப்பாகப் பார்த்துக்கொண்டு, அடங்கி நடக்கும் அன்புப் பெண்களை மணப்பதே நலம். சாயம் பூசிக் கொண்டு சாய்வு நாற்காலியில் கொலுவிருக்கும் சாயச் சீமாட்டிகளைவிட, மளமளவென்று நாலுகுடம் நீர் சுமந்து, அறுசுவை யுணவாக்கும் சுறுசுறுப்பான மனைவியே நலம்.

ஆதலால் இது நல்ல இடம். பெற்றோருக்கும் பிடித்திருக்கிறது. மணம் புரிக. வீட்டுக்குப் பிடித்தமான பெண் இக்காலம் அரிது. வீட்டு மனப்பான்மையே அருகி வீதி மனப்பான்மை இக்காலம் அதிகரிக்கிறது. இல்லறம் மல்லறமாகாது நல்லறமாக வேண்டுமானல், அழகும், படிப்பு மட்டும் போதா, வீட்டுக் கருத்தும் இருக்க வேண்டும். கிராமவாசிகளிடம் அக்கருத்து நிரம்ப உண்டு.

மணவழகு பொலிக!

அன்பு.

கு. பா.

# 34. திருமண வாழ்த்து

**புதுமண தம்பதிகளுக்கு!**

காதலே கடவுள்; காதலே வாழ்வு!

**பைந்தமிழ் மாப்பிள்ளையே, திருமணம் பொலிக!**
**முப்பாலும் பொங்கும் இல்லற வாழ்விற் பொலிக!**

மனித வாழ்க்கை இரண்டு தத்துவங்களுடையது. ஒன்று ஆண்; மற்றொன்று பெண். ஆணும் பெண்ணும், சுடரும் கதிரும் போல் ஒன்றே. அதனாலே தான் இரண்டிற்கும் உலகில் அவ்வளவு கவர்ச்சியுள்ளது. முருகன் வள்ளியைத் தேடித் தினைப்புனத்திற்குப் போனதேன்? சிவன் கௌரியைத் தேடி வந்ததேன்? உமை சிவனை அடையத் தவம் புரிந்ததேன்? சுந்தரர் பரவையை நேசித்ததேன்? இருவரையும் கூட்டுவிக்கச் சிவனே தூது நடந்ததேன்? இவை யெல்லாம் தற்கால மூளைகளுக்குப் புராணக் குப்பையாகத் தோன்றினாலும் ஆழ்ந்து பார்த்தால்,உள்ளே அரிய தத்துவம் விளங்கும். அஃதாவது ஆண்மை - பெண்மையின் கூட்டுறவுதான் வாழ்க்கை. இரண்டில்லாமல் உலகில்லை.

> **பெண்ணின்றி ஆணில்லை ;**
> **ஆணின்றிப் பெண்ணில்லை**
> **எண்ணிருவர்**
> **சேர்ந்தே இகம்.**

இருவரும் உடலும் உயிரும் போலச் சேர்ந்து வாழ்வது தான் இல்லறம். இல்லறத்திற்கு **அறமும் அன்பும்** உயிரிகள் (lungs) ஆகும். **அன்பின்** வழியது உயிர் நிலை. **அறத்தால்** வருவதே இன்பம். இந்த இரண்டிற்கும் இணைப்பாக நிற்பது பொருள். கல்வி, செல்வம், வீரம், தொழில், வெற்றி, புகழ் எல்லாம் பொருளில் அடக்கம். இல்லறம் காதலன்பில் வேரூன்றி, அறமாகிய அடிமரமெழுந்து, பொருளாகிய கிளை பரவி, இன்பம் மலர்ந்து, அருளாகிய கனியாக நிறைவுறுகிறது.

இத்தகைய இல்லறமே நல்லறம். இந்த இல்லறத்திற்கு ஆண், பெண் உள்ளத்தை உந்தி ஊக்கும் ஒரு மயக்கமே காதல் என்பது.

காந்தமுனை மாறிக் கவர்வது போலும்மே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு.

காந்தத்தில் எதிர்முனைகள் கவர்ந்து சக்தியாக எழுந்து, பல அற்புதங்களைச் செய்யும் அது போலவே ஆண் பெண் உள்ளங்கள் கவர்ச்சி கொண்டு, மக்களாகவும், பொதுநலமாகவும் பரவிப் பொலிகின்றன. இந்தக் காந்தத்துடன் அருளாகிய மின்சாரமும் கூடினால், அதன் சக்தி அளவற்றதாகும். வெறும் மின்சாரக் கம்பிகளை, இரும்பில் பிணைத்தாலே காந்த சக்தி உண்டாகும். காந்த ஒருமையில், மின்சாரம் பாய்ச்சினால் கேட்க வேண்டுமா? அப்பூதியடிகளும், வள்ளுவரும் அப்படிப்பட்ட அருள் மலர்ச்சியுடன் இல்லறம் நடத்தினர். சுந்தரர் - பரவை காதலும், வெறும் தேக சம்பந்தமன்று. அருட் சம்பந்தமே; ஞான சம்பந்தக் காதலே.

இல்லறம் சும்மா உண்டுடுத்தி கூடிக் குழைந்து சிற்றின்பம் நுகர மட்டும் எற்பட்டதன்று. விலங்குகள் கூட உண்டுறங்கிப் பெற்றுப் பெருகிக் கணக்கை முடித்துச் செல்லுகின்றன. மனிதன் தன்னறிவன். மானிடம் கடவுளை உணர்ந்து அவன் அருள் வழியில் நடந்து பேரின்பப் பயன் பெறும் ஒரு கருவியாகும். அதனாலே தான் அறம் பொருள் இன்பத்திற்கு முடிவான பயனாகப் பெரியோர் வீட்டின்பத்தை அமைத்தனர். மூன்று பொருளும் நாலாவது பொருளுக்கே துணைகளாம்.

இல்லறமே வீட்டின்பம் இல்லாளே நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்.

பெண்மை என்பது அற்புதமான ஒரு சக்தி. ஆண், கட்டித் தங்கம். பெண்மை அதனை அனுபவ உலையில் உருக்கி மாற்றேற்றி, நகாசு செய்து, அணியாக்கி அழகு செய்யும் கலைச் சிற்பியாகும். மனித நாகரிகம் பெண்மையாலே

தான் வளர்ந்தது. பெண்மை யின்றேல் உலகம் காட்டு மிராண்டித் தனமாகத்தா னிருக்கும்.

**வாழ்க்கைத் துணையும் வகையும் விரிநலனும்**
**ஆக்கமும் பெண் சக்தியாம்.**

ஆண்மை யென்பது பெண்மையின் கற்பையும், பொற்பையும் காக்கும் வீறுபெற்ற திறமையாகும். வீட்டை ஆளும் பெண்ணுக்கு, நாட்டு நலங்களைக் கொண்டு வந்து இல்லறத்தைத் தழைக்கச் செய்வதே ஆணின் கடமை. ஆணுக்கு நல்ல கல்வி, தொழில் உலகறிவு, ஆற்றல். வினைத் திட்பம், மனத் திட்பம், ஒட்பம், ஒப்புரவு எல்லாம் வேண்டும். இராமாயணத்தின் தத்துவப் பொருள், பெண்மையின் கற்பை ஆண்மையின் வீரதருமம் காப்பதேயாகும். மண்ணும் பயிரும் போல், இருவர் வாழ்வும் ஒருமைப்பட்டுச் செழித்தோங்கவேண்டும். ஒருவரை யொருவர் மீறிச் சென்று, குடும்ப வாழ்வைப் போராட்டமும் மாறுட்டமும் ஆக்காமல்,ஒருவரை யொருவர் அறிந்து, நயந்து இணங்கி அன்புடன் நடப்பதுதான் இல்லறத்தில் வெற்றி காண்பதன் வழியாகும்.

**இல்லாளோ டன்புற் றிணங்கி அறங்காக்க**
**வல்லாளன் இல்லாள னும்.**

காதலொழுக்கத்தை இருவரும் உயிர் போலப் போற்ற வேண்டும். கற்பு என்பது இருவருக்கும் பொது. கிளிகளும் பூனைகளுங் கூட, அயல் நோக்குவதில்லை. ஒன்று காதலிக்கும் பூனையிடம், மற்றொன்று சென்றால் உருமித் துரத்தி விடும். காதல் மனைவியிடமே, அன்பு மக்களிடம், எல்லா உயிர்களிடமும் அருளைக் காட்டவேண்டும்.

**மனைவியிடமே காதலாம்; மக்களிடமே அன்பாம்;**
**அன்னவரொடுந் தண்ணருளே யாம்**

இன்றுலகில் இத்தகைய காதல் நெறி இல்லாக் குறையே எல்லாத் துயர்களுக்கும் மூலமாகும். மேற்கே பார்த்தால், நேற்று கோர்த்த கைகள் இன்று குத்துச் சண்டை யிட்டுப் பிரிகின்றன. விவாக ரத்து, கற்பழிவு,

காதல் பொறாமைகள், காதல் கொலைகள், இல்லற மறுப்பு எல்லாம் அங்கே அழிநடம் புரிகின்றன. நமது நாட்டிலே கூட இல்லற வாழ்க்கை கேடுற்றிருக்கிறது. பெண்மையின் பெருமையை அறிந்து நடக்கும் ஆண்மையினாலேதான் இல்லறம் மாண்புறும். பெண் வெறும் சமையல்காரி, பிள்ளை பெறும் யந்திரம், நமது வேலை செய்யும் அடிமை என்ற எண்ணம் இருந்தால், இல்லறம் நல்லறமாகாது மல்லறமாகத்தான் முடியும். அடிமையுணர்வை வேரோடு களைந்தெறிக. இருவரும் சரி நிகராக இல்லறத்தைப் பொறுப்புணர்ந்து தாங்குக. கல்வி, அறிவு வளர்ச்சி, உடற் பயிற்சி, இவை ஆண் பெண் இருவருக்கும் வேண்டும். இப்போதிருக்கும் நிலையில், பெண்கள் காற்றும் வெயிலும்பட வெளியே உலாவி வரக்கூட இடமில்லை சுகாதார வாழ்க்கை இருவருக்கும் அவசியம். தூய உணவு, தூய உடை, தூய இல்லம், தூய சுற்றம், தூய உணவுகளை இருவரும் பயில்க. இத்தகைய இல்லறத்தை விளக்குக.

திருமிகு பழநியாண்டி உண்மைத் தமிழன், முன்னணியில் விளங்கும் இளங்காளை நல்ல அறிவாளி, பொது நலத் தொண்டில் ஆர்வங் கொண்டவன். நண்பர் அன்பிற்கு உரியவன் .... அவன் தனலட்சுமியையே மணம் புரிய நேர்ந்தது மகிழ்ச்சிக்குரியது. தனம், இல்லற வாழ்விற்கு ஊற்று நீர் போலும். லட்சுமி, திருக்களெல்லாம் தரும் சக்தியாகும். இருவரும் கூடிக் குழைந்து நடத்தும் இல்லறம் இன்பப் பழமாகக் கனிந்து குலுங்குக .... பழந் தன லட்சுமிகள் வாழ்க! அன்புப் பழத்திற்கும், தனத் திற்கும் திருமணவாழ்வு இனிதாகுக !!

உள்ளமே தில்லையாக உயிர்தோறு நடனம் செய்யும்
வள்ளலின் கருணை யாலே வளமையும் இளமை யன்பும்
தெள்ளறி வாற்றல் யாவும் திருவுடன் பெருகி நாளும்
வள்ளியும் முருகனும்போல் வதுவரர் வாழ்க மாதோ !

மணமக்கள் பெற்றுப் பெருகிப் பெருவாழ்வு வாழ்க!

ஓம் சுத்த சக்தி! சுத்தானந்த பாரதி.

# 35. புதுமைப் பெண்

(சென்னைப்பட்டி மன்றத் துணை யமைச்சர்

த. ந. ஆனந்த நாயகியார்க்கு வரைந்தது.)

**அன்புள்ள அம்மையே,**

மங்கலமாகுக! நலமோங்குக!!

புதுமை வேண்டும்; பல நாட்டுறவால் நமது நடையுடை பாவனைகள் புதுமை பெறுகின்றன; ஆனால் புதுமை, நாட்டிற்கும் வீட்டிற்கும் நலமாக வேண்டும். அன்னிய சாமான்களால் பகட்டும் புதுமை, போலிப் புதுமையாகும்.

பெண்கள் இக்காலம் கோண வகிட்டிலும், முகச் சாயத்திலும், பொய்ப்பல் சிரிப்பிலும், ஆங்கிலத்தமிழிலும் நாவல்—மோகத்திலும், இடுப்பு வணங்காத நாற்காலி வாழ்விலும் பிடிவாதங் கொண்டு, சாய்வு நாற்காலியில் கொலுவிருக்கும் சாயச் சீமாட்டிகளாக நாகரிக நாடகம் நடிக்கிறார்கள். ஏழைக் கணவன் பாடுபட்டுக் கொண்டு வருவதைப் பேசும் படத்திற்கும், உல்லாசப் பொழுது போக்கிற்கும் உதறி விட்டு, வீட்டைக் கடனில் ஆழ்த்துகிறார்கள்—இது பொறுப்பறியாத போலித்தனமாகும். நமது நாட்டிற்கு மஞ்சட் குங்குமமும், புடவை இரவிக்கையுமே ஏற்றவை.

பெண்கள் வீட்டுக் காரியத்தை ஊன்றிக் கவனித்துக் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும். கணவனுடன் இணங்கி வாழ்வதே பெண்ணுக்குப் பெருமை; பிணங்கி வாழ்வது சிறுமை. ஆண் பெண் சரி நிகராக, அறிவும் அன்பும், மூளையும் உள்ளமும்போல வாழவேண்டும். இயற்கையழகும், காலத்திற்கேற்ற கல்வியறிவும் பெண்களுக்கு நன்கலமாகும்!!

அன்பு! அன்பு!!

# 36. புது இந்தியாவில் முழுத்தமிழர்

வீரத் தமிழா!

இந்தியா இன்று விடுதலை பெற்றது; பிரிவினையான கெடுதலையும் பெற்றது; இன்று கூப்லாண்டின் திட்டம் நிறைவேறியிருக்கிறது. ஆங்கிலேயர் இந்தியாவைத் தொகுத்து அடக்கி ஆண்டனர்; பிரிவினையால் ஆண்டனர்; உலக நிலையும், ஆசிய விழிப்பும், இந்தியரின் உணர்ச்சிக் கனலும், உரிமை எழுச்சியும், அன்னியரை வெளியேறச் செய்கின்றன. போகிற போக்கில் இந்தியாவைப்பகுத்துச்சின்னாபின்னமாக்கிச் செல்கின்றனர் அன்னியர். வகுப்புவாதப் பேயும், மதவெறிப் பூதமும் வடநாட்டை இரத்தக் களனாக்கி உயிர்களை அள்ளி விழுங்குகின்றன. கலை சிறந்த வங்கமும் வீரம் செறிந்த பாஞ்சாலமும் படும்பாடு — ஹா!

இந்தியா வேண்டியது முழு உரிமை; அறுபதாண்டுகளாகக் காங்கரஸ் அமைதிப்போர் புரிந்து தியாகத் தீயில் குளித்து சிறையிருளில் வருந்தி வேண்டியது முழுவுரிமை-பூரண சுதந்திரம். இன்று ஹாயிமெளண்ட்பாடன் நமக்களித்தது முழுப் பிரிவினை. பாகிஸ்தான் நாட்டில் ஐந்தில் ஒரு பங்கைப் பற்றிக் கொண்டது—. பாகிஸ்தானத்திற்கும் குறிவைத்துள்ளது. சுதேச மன்னர் ஜனநாயகம் தாண்டவமாடும் இந்தக் காலத்திலும் தனிக்காட்டு தர்பார் நடத்தி ஜனங்களை அடக்கியாள விரும்புவது தற்கொலையாகும்!

காங்கரஸ் குடியரசு நாட்டும்; ஆனால் தடியரசு ஒய வேண்டும்; வகுப்புவாதம் ஒழியவேண்டும்:

தமிழகம் தனியரசாய், இந்திய அரசுடன் இணைந்து வாழும். ஆந்திரர் ஆந்திர மண்டலாதிபதிகள் ஆவார்கள்;

தமிழர் தமிழகத்தலைமை வகிப்பர். இனித்தான் நமக்குப் பொறுப்பு மிகுதி. நமது நாடு நமது; ஆனல் அதை ஆளும் திறமை நமக்கு வேண்டும்; இத்திறமை

**வீரத் தமிழர் இரத்தத்தில் கனல் வேண்டும்:** மனத் திட்பமும் வினைத்திட்பமுங் கொண்டு தமிழர் காலத்தை வென்று முன்னேற வேண்டும்.

1. தமிழர் தமிழை உயிர்போலப் போற்றி உலகக் கலைச் சோலையாக்க வேண்டும். தமிழனைத் தமிழன் உயிர் போல நேசிக்கவேண்டும்.

2. இளந்தமிழர் சங்க வீரர்போலப் போராண்மை பெற்று ஊராண்மை நாட்டவேண்டும். கண்ணுறங்காக் காவலுடனிருந்து - தமிழகத்தில் அன்னியர் இடம்பெற்று அடிமைவலை வீசாமல் நாட்டைப் பாதுகாக்க வேண்டும்.

3. காலத்திற் கேற்ற கல்விப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் பெற்று தமிழகத்தைச் செல்வத் தொழிற் சாலையாக்கி வளப்படுத்த வேண்டும்.

4. தமிழர் கப்பல் நடத்தி உலகத் துறைமுகங்களில் செல்வாக்குப் பெறவேண்டும். தமிழர் துய்த்து மிஞ்சிய தமிழகப் பொருளை கப்பலேற்றி உலகிற்கீந்து, தமிழருக்கு வேண்டிய உலகப் பொருள்களைப் பல நாடுகளிலிருந்தும் கொண்டு வந்து குவிக்கவேண்டும்.

5. **தமிழர் ஊசிமுதல் விண்ணூர்தி** வரையில் தமிழகத்திலேயே செய்யவேண்டும். அதற்கு இளைஞரைப் பல நாடுகளுக்கும் **அனுப்பித்** தொழில் கற்றுவரச் செய்து, பிறகு முதலீந்து இங்கே நாட்டுக்குப் பயனாகும்படி தொழில் செய்யத் தூண்டவேண்டும்.

6. தமிழர் கூட்டம் ஒரே தமிழ் உணர்வுடன் **திருக்குறள் வழியே வாழ்வாங்கு வாழ வேண்டும்.** சாதி மத வேறுபாடும் வகுப்பு வாதமும், வம்பும் தும்பும் வசவும் ஒழிந்து, எல்லாரும் அன்பும் ஆதரவுமாக வாழவேண்டும்.

7. தமிழர் இனி வெளிநாடுகளுக்குக் கூலிகளாகப் போகக்கூடாது. **தமிழர் உழைப்பு தமிழகத்தைச் செல்வச் சோலையாக்க வேண்டும்.** தமிழகத்தில் உள்ள உலோகப் பொருள்களையும், இயற்கை வளங்களையும் தற்கால ஸயன்ஸ் முறைப்படி பயன்படுத்த வேண்டும்.

8. தமிழர் இன்றுலகில் பெருமை பெற வேண்டுமானால் அருட்பாவும் வேண்டும், அணு சக்தியும் வேண்டும் - ஆத்ம சக்தியும் வேண்டும், உடலுறுதியும் வேண்டும்.

9. வறட்டுத் துறவும் மாயா வாதமும் ஒழிந்து சுத்த சன்மார்க்க யோகம் பரவி, அருளுணர்வுடன் வாழ்வை வாழவேண்டும். யோகமும் போகமும் தியாகமும் ஒன்றுகூடி மனித வாழ்வைப் பூரணமாக்கவேண்டும்.

10. திருத்தொண்டர் படை சேர்த்து, தமிழ்க் கலையும் நம் அருட் பெரியார் கண்ட சுத்த சன்மார்க்கமும் உலகிற் பரவ எல்லா நாடுகளிலும் பாதிரிமார்போல் ஆக்கவே தகளுடன் பிரசாரம் செய்யவேண்டும். இதுதான் இன்றைத் தமிழர் கடமை - இதுதான் இந்தியர் கடமையுமாகும்.

எந்தாய் வாழ்க.

சுத்தானந்த பாரதி.

Y. M. C. A.

## 37. பட்டி மன்றம்.

அமைச்சர் அன்புப் பழநிக்கு,

நலமாகுக! பட்டிமன்றம் நாட்டுவதுபற்றி மகிழ்வு. ஒற்றுமை, உள்ளன்பு, ஒப்புரவு, உரிமை காத்தல், உயிர்க்கருணை, அறிவு வளர்ச்சி — இவை அதன் கொள்கையாகுக.

வாரம் ஒரு கூட்டம், வருடம் மூன்று நாடகங்கள்- நடத்துக. மாதம் இரு முறை சிற்றூர்களுக்குச் சென்று எழுத்தறிவித்தல், உடல் நலஞ் சொல்லல், கைத்தொழில் வளர்த்தல் - வீரர் கதைகள் - இவற்றைக் கொண்டு பொது நலம் புரிக.

சாதி மத வேறு பாடின்றி எல்லோரும் ஒரு அன்புக் குலமாக வாழ்க!

அறிஞர் சேதுப் பிள்ளை யவர்கள் கலைச் சுவை யில் தோய்ந்த புலவர் மணி; அவர்கள் கம்பராமாயண விரிவுரை நிகழ்த்தி வந்தது தமிழருக்கு ஆக்கந் தந்தது. அவர் துணையால் பட்டி மன்றம் தோன்றி யிருப்பது குறித்து மகிழ்ச்சி.

புலவர் சேதுப்பிள்ளை தமிழில் நன்ருகப் பேசக் கூடி யவர். அவர் கம்பன் உள்ளத்தை உண்மையான தமிழ்ப் பண்புடன் அறிந்தவர். சென்னை இளைஞர் அவர் பேச் சைக் கருத்துடன் கேட்டுப் பயன் பெறுக.

தமிழர் உள்ளத்தைத் தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்-திலும் விளக்க வேண்டும். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் காரியம் நடக்க வேண்டும். இப்போதைக்கு அதுதான் உலகின் ஒப்பற்ற உலக மொழி. அதை நம்மவர் கருத்துடன் வளர்க்க வேண்டும். இன்றேல் உல குடன் ஒத்துழைக்கத் தடை ஏற்படும்.

ஒய். எம். சி. ஏ யில் பாபுலி துரையுடனும் கே. டி. பாலுவுடனும் அடிக்கடி சென்று பார்த்ததுண்டு. அங்கே நடந்த கிராம மகா நாடு, இசை மகா நாடு முதலியவற்றிற் குத் தலைமை வகித்ததுண்டு. அந்த நிலயம் போல ஒழுங் காகத் தமிழருக்கென்றே ஒரு நிலயம் காணவேண்டும். பாதிரிமார் போலத் தமிழ்த் தொண்டர் பணி செய்க.

பட்டி மன்றம் ஆண்டு விழா பயன் பழுத்து நிலவுக. தமிழன் நாவன்மையால் உலகை வெல்ல வேண்டும். ஒவ்வொரு தமிழனும் நாவீறுடைய நக்கீரனுருக.

கட்டிக் கரும்புங் கனிரசமும் போன்ற தமிழ்
பட்டிமன் றத்திற் பரவுகவே—எட்டெட்டுத்
திக்கினிலும் வீரத் திருவாளர் செந்தமிழை
நக்கீரர் போல நவின்று.

பட்டி மன்றம் தமிழின் வெற்றி முரசாக விளங்குக!

பட்டி மன்றம் முன்னெட்டிச் செல்க.

நன் முயற்சிகள் மேன்மேலும் வெற்றி பெறுக.

அன்பு,

சுத்தானந்த பாரதி.

# 38. மனைவி

பழந் தன லட்சுமியே,

மங்கலமாகுக! நலமோங்குக!! நீ வீட்டுத் திருமகள், வீட்டரசி. மனைவியைக் கணவன் சக்தியாக மதித்துப் போற்ற வேண்டும். எந்த வீட்டில் மனைவி மனக்கசப்பில்லாது, கண்ணீர் விடாது, புன்னகையுடன் விளங்குகிறாளோ, அந்த வீட்டைத்தேடி வருவாள் சீதேவி. பெண்ணைப் பெருமைப் படுத்தும் மனைவாழ்வு நாட்டைப் பெருமைப் படுத்தும்.

வீணையும் தந்தியும், தேரும் உருளையும், மலரும் மணமும், நீரும் நிலமும்போல நாயகனுடன் மனமொத்து வாழ வேண்டும். அவனது இன்ப துன்பத்தைத் தனது இன்ப துன்பமாகக் கருதவேண்டும்.

கள்ளம், கபடு, போட்டி சண்டை, அழகுச் செருக்குகள் இன்றி, கற்பும், அன்பும் மிகுந்து கணவனுக்கு உற்ற துணையாயிரு.

மனிதரிற்பாதி பெண். பாதியுடலை எப்படிப் பாதுகாப்போமோ, அப்படியே பெண்ணை மதித்துப் பாதுகாக்க வேண்டும். **கற்பு என்பது ஆண் பெண் இருவருக்கும் வேண்டும்.** அன்பும் கற்புமே பெண்மைக் கழகு. நகைபோடும் வழக்கத்தைப் பெண்கள் குறைக்க வேண்டும். தூய ஆடை, மஞ்சளும் குங்குமமும், குலுங்கும் புன்னகை முகம், நல்லொழுக்கம் ஆகிய இவையே பெண்களுக்கழகு. நல்ல நூல்களைப் படிக்கவேண்டும்; நாட்டு நடப்புகளை அவ்வப்போது அறிந்துகொள்ள வேண்டும். கணவன் நாட்டுக்கு நன்மையான ஒரு பணி புரிந்தால், குறுக்கே நிற்காது, அவன் செய்யும் தன்னலமற்றப் பொதுநலப் பணி வெற்றி பெறும்படி உடனிருந்து உதவிசெய்ய வேண்டும்; தம் குழந்தைகளுக்குச் சோறூட்டுவதுடன் நாட்டன்பும் புகட்டி அவர்களை வீர தீர ராக்கவேண்டும். **நாட்டின் நன்மையே வீட்டின் பெருமை** என்றுணர வேண்டும் பெண்டிர்.

மற்றொன்று:— கணவன் செயலுக் கேற்றபடியே சிக்கனமாகக் குடும்பப்பொறுப்பை வகித்து, அவசரத்திற்குச் சிறு தொகை மீதி யிருக்கும்படியே செலவிட வேண்டும். கணவன் அளவிற்கு மிஞ்சிய பொருளில் ஆசை வைக்கக்கூடாது. **மனைவி உடல்; கணவன் உயிர்;** ஒன்றிற்கு மற்றொன்று ஆதாரம்.

அன்பு, அன்பு, அன்பு.

சு. பா.

---

# 39. உடல்

(சென்னை மேரி அரசி கல்லூரி தமிழ்ச்சங்க அமைச்சர்
த. ந. ஆனந்த நாயகியார்க்கு வரைந்தது)

**செந்தமிழ்ச் செல்வி,**

உடம்பு கவனம். எல்லாரும் இன்பமே வேண்டுவர். பெரும்பாலார் தேடும் உலகின்பம் நீடித்திருப்பதில்லை. இன்பத்துடன் துன்பமும் அதில் கலந்துவரும்; களிப்புடன் கவலையும் சேர்ந்திருக்கும்.

அம்மா உடலை உதரிச் சென்றது குறித்து ஏங்காதே. வாழ்வு தொட்டிலுக்கும் புதை குழிக்கும் பவனிதான். சீவன் சிவனாகுமட்டும் பிறவியுண்டு. வினை யிருக்குமட்டும் போக்கு வரத்துண்டு; ஆட்ட மிருக்குமட்டும் திரைவிழும், எழும். பிறப்பும், இருப்பும், இறப்பும் உலகிற்கு இயல்பு தானே! சாவென்பது சட்டை மாற்றம். முன்னே விட்ட வினைக்குறை தீர ஆன்மா இவ்வுடற் சட்டையை மாட்டிக் கொண்டு, உலகரங்கில் வாழ்வென்னும் நாடகத்தை நடிக்கிறது; இந்தவுடலின் நாடகம் முடிந்ததும், அதைக் களைந்து, தனது இயற்கைக்குத்தக்க வேறுடல் பூணுகிறது. ஆயுளென்பது வினையைத் தீர்க்க நமக்குக் கொடுக்கப்பட்ட காலமாகும். அக்காலத்திற்குள் நாம் வந்த வினையைச் செய்யாவிடின், காலமணியடித்ததும்

எழுந்து சென்று, மறு பிறப்பெய்தி விட்ட குறையைத் தொடங்கவேண்டும். இந்த ஊனுடல் ஒருநாள் வீழும்; இது உறுதி. எத்தனையோ காயசித்தரை எமன் விழுங்கி விட்டான். உயிருள்ளபோதே ஆன்மலாபம் பெற வேண்டும்; ஆருயிர்ப்பணி செய்யவேண்டும். செய்.

வாழ்வுத் தோட்டம் மேடுபள்ளமுள்ளது. அதில் நன்னிழற் சாலைகளும் உண்டு; காடுமுரடான முட்புதர்க் காடுகளும் உண்டு. பகுத்தறிவென்னும் விழியால் நன்னெறி கண்டு, நடந்து வீடுசேரவேண்டும். உள்ளந்தோறும் இறைவன் உள்ளான். அவனது திருவருட் சுடர் நம்மை நடத்துக!

உன் உடல் ஒருகோயில். அதைச் சுத்தமாக வைத்திரு. ஆருயிரன்பும், ஆண்டவனன்புங்கொண்டு அதிற் குடியிரு.

**பாரத மாதா சுதந்திரச் சுடர் வீசி மீண்டும் எழுந்து நிற்கிருள்!** ஆன்ம சக்தி அளிக்கிருள்; உலகை அமர வாழ்விற்கு நடத்துகிருள், நம்பு!

உங்கள் அன்புமிக்க அண்ணர் அன்புப்பழம்நீ பொதுநலத்தொண்டில் ஆர்வங்கொண்டவன். அவருடன் சேர்ந்து நாடோங்க, வீடோங்க, நலமோங்க உழையுங்கள். அன்பு, அன்பு, அன்பு.

அன்பு வாழ்க,

சுத்தானந்தம்.

# 40. அருங்கலை

**திருமதி ஆனந்திக்கு,**

நலமாகுக!

நீ இசையை பிரிய பாடமாக எடுத்துக்கொண்டது பற்றி மகிழ்ச்சி! நல்லது.

நாடகங்களில் பாட்டு எப்படி அமையவேண்டுமென்பதைப்பற்றி உனக்கு எடுத்துரைக்கிறேன். விருத்

தங்கள் பொருள் எளிதாக விளங்கினால் அடிக்கடி பாடலாம். இராக தாளங்களுடன் கூடிய பாட்டுகள் மிகச் சுருக்கமாய் இருக்கவேண்டும். நல்லுரைகளாலே தான் நாடகம் பயன் விளங்கும். தெலுங்கு நாடகங்களில் பத்தியங்களே அதிகம். அதுமாதிரியே தமிழ் நாடகங்களில் விருத்தங்கள் இருப்பது நலம். மிகவும் உருக்கமான காட்சிகளில், நல்ல பொருளுள்ள சிறுசிறு துக்கடாப்பாட்டுகள் பாடலாம். மேடையில் பாடும்போது கைத்தாளம் போடவேண்டா. சொற்களை அழுத்தந் திருத்தமாக உரைக்க வேண்டும். கீர்த்தனங்களும், பதங்களும், பாடும்போது அவற்றின் பொருளை அபிநயத்தால் விளக்க வேண்டும்.

**நாட்டியம் :—**

பண், பரதம், நாடகம் இம்மூன்றும், தேவர்களிடமிருந்து உற்பத்தியாகி, தெய்வத்தன்மை பொருந்தி, உலகில் மாசற்ற இன்பவாழ்வைக் காண்பதற்கே நிலவுகின்றன. பிரம்மா, நாரதர், பரதர், யாக்ஞவல்கி முதலியோர், இசை வளர்த்தனர். சிவனின் ஆனந்த நடனமும், கண்ணனின் ராசலீலையும் நாட்டியத்தைத் துலக்கின. நன்னாட்களில் கோலாட்டம், குதித்துப்பாடல் முதலியன சிறந்த நோக்கத்துடன் ஏற்பட்டன. காலத்தால் எப்படிச் சீர்கெடினும் இசை, கூத்து, நடனம் முதலியகலைகள், நமது கோயில் திருவாராதனங்களில் மிகச் சிறந்த நோக்கத்துடனேயே இணைக்கப்பட்டன. பரதம் என்பது கலைச்சொல்: ப=(பாவனை) + ர = (ராகம்)+ த=(தாளம்). இசையின் மூன்று உயிர்களான பாவனை, ராகம், தாளம் இவையே "பரத" என்னும் மொழியின் பொருள். பரதநாட்டியம் இம் மூன்றையும் ஜீவனாகக் கொண்டது.

செல்வக் கலைமகள் யாழால் அறிவமுது பொழிகிறாள். நாரதர் தனது வீணாகானத்தால் பக்தி சரத்தை மாந்தர் உள்ளத்திற் பாய்ச்சுகிறார். கண்ணன் தனது மோகன முரளியால் ஜீவகோபிகளை வசப்படுத்துகிறான். இராவணன் ஸாமகானத்தால் சிவனருள் பெற்றான்.

நமது தமிழ் நாட்டுப் பெரியாரான சிவத்தொண்டர்களும் ஆழ்வாராதிகளும், கடவுட் காட்சியையும், அருளின்பத்தையும் அடைந்தனர். அந்த அருளின்பத்தை அடைய நீயும் முயற்சி செய். ஆசிரியை ராஜாமணிக்கும், திருமதி நல்லம்மாவுக்கும் அன்பைச் சொல்லுக.

**கலைவளர்க! தமிழ் ஓங்குக!**

**அன்பு பெருகுக! தமிழகம் பொலிக!**

Like a moon-lit lily
I shall remain entranced
In His love consciously
A Spirit-bliss—embraced

**Shuddhanandha Bharati**

# 41. யாப்பு

அன்புள்ள கோவிந்தசாமிப் புலவருக்கு,

நலமாகுக !

இதன் பாடல்களிற் பெரும்பகுதி **யாப்பைத்** தழுவியே யிருக்கும். இசையமைதியும் சேர்ந்திருக்கும். 12,000 விருத்தங்கள்கொண்ட பாரதசக்தி அத்தகையது. அதைப்பண்ணுடன் பாடலாம். தேவாரம் திருவாய்மொழி இவற்றின் அமைப்பைப் பின்பற்றியே யாப்பமைதியும் நடக்கும். இயல்பாக உள்ளத்திற் பூத்த புதிய சந்தங்கள் மிகப்பல. அவற்றைப் பழைய யாப்பைக் கொண்டு அளித்தல் இயலாது. **கவிக்கலை** என்ற பெருநூல் வரும். அதில் எல்லாம் விளக்கிப் புதிய தமிழ்க் கவிகளுக்கு ஆக்கந்தரலாம். யாப்பும் இசையும் வல்லார் பண்ணுடன் பாடும்போதுதான் கவியின் அமைப்புந் தெரியும். வங்கத்தில் தாகூர் பழைய இலக்கணங்களையே ஒதுக்கி, உள்ளே யெழுந்த புதிய சந்தங்களைக் கவிதையாக்கினர். இன்றுகூட அவரை எதிர்க்கும் புலவர் உண்டு. ஆயினும் அவருடைய பொருளாழமும்

சந்த இனிமையும் அவருக்குமுன் பெரும் புலவர் என்று புகழ்பெற்ற மது சூதன கவிக்குக் கூட அமையவில்லை. தாகூரால் வங்கமொழி உலகளாவியது. அம்முயற்சியைத் தமிழுக்கும் செய்யவேண்டும். உலகமொழிகளில் உள்ள நயங்களைத் தமிழாக்க வேண்டும்.

தமிழகத்திற் பிறந்த பெரியார்களை முதலில் தமிழருக்கு விளக்கிப் பிறகு உலகிற்கு விளக்க முயற்சி நடக்கிறது.

குறைகள் கண்டால் இங்கெழுதினல் திருத்திக்கொள்ளலாமே. இதற்காகத் தூற்றுவானேன்? அல்லும் பகலும் தமிழ்த்தோட்டத்தில் வேலைசெய்யும் ஒருவன் ஒரு அடி பிசகினல் தக்கவர்கள் இப்படிப்போ என்று வழி காட்டுதல் முறையாகும். அஃதின்றி காலை இழுத்து விட்டு ஆளை மண்ணில் தள்ளுவது முறையாகாது.

இங்கே நட்ட தோட்டம், ஏராளமான கனிகளை அன்புக் கூடையில் நிரப்பித் தமிழருக்குத் தந்துள்ளது. அவரவர் விருப்பமானதை உண்க. காயாயிருப்பதைக் கனியவைத்துண்க. அதிகப் புளிப்பானல் சிறிது உப்புச் சேர்த்துத் துவையலாக்கி உட்கொள்க. அஃதின்றி ஒன்று காயானல் எல்லாக் கனிகளையும் ஒதுக்கித்தள்ளுவது முறையில்லையே. அப்படி ஒதுக்கினுலும் இனிக் கவலையில்லை. இதன் வேலை இதோ முடிந்துவிட்டது. இனிப் புது தவவாழ்வே வாழ்வாகும்.

**இளந்தமிழர்களாகிய நீங்கள் இளவரசர்கள்.** இந்த உள்ளத்திற் கனிந்த பழங்களைத் தக்கமுறையிற் பயன்படுத்துங்கள். இதற்கு நீங்களே குழந்தைகள். **ஜோதி** கற்பூரத்தொழிற்சாலை நடத்தும் அன்புமணி **ஆ. பொன்னுசாமி** அவர்கள் சென்னையில் தமிழருக்காக **மணி மண்டபம்** காண ஆர்வமுடன் இருப்பது பற்றி மகிழ்ச்சி. **மாணவமணிகள் அனைவரும் அவருடன் ஒத்துழைக்கவேண்டும்.**

**அன்பு, அன்பு,**
**சுத்தானந்த பாரதி,**

# 42. வேலும் வில்லும்

புலவர்மணி

ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கட்கு,

இறைவனருளால் நலமோங்குக!

அன்புப் பழநியாண்டியிடம் தாங்கள் கொடுத்து அனுப்பிய வேலும் வில்லும் கண்டு மிக்க மகிழ்ச்சி கொண்டேன்; நன்றி. தமிழன்னை உலகின் கலைப்போரில் வெற்றி பெற்றுத் தனக்குரிய உயர்நிலையைப் பெறுதற்கு, இத்தகைய கூரிய நேரிய சீரிய வேலும், திட்ப நுட்பமான கணை தாங்கிய வில்லும் வேண்டும். கச்சியப்பர் வேலனே கம்பனின் வில்லன் என்பது நுட்பமாக ஆராய்ந்தாற் புலனாகும்.

கம்பன் வடநாட்டுக் கதையில் தமிழ் உள்ளத்தை வைத்தெழுதினன். கதைகூடத் தமிழகத்திலேதான் நடந்தது. இராமனின் இளமைதான் அயோத்தியிற் சென்றது. இராமாயணத்திற்குச்செயற்களன் தமிழகமே. ஆதலால் அது தமிழர் உரிமையுடன் கந்தபுராணம் போலவே பாராட்டத்தக்க பெருங் கதையாகும்.

தங்கள் செவ்விய தமிழும், சொல்லழகும், பொருட் செறிவுங் கொண்ட இனிய நூல்கள் பல வெளிவர வேண்டும்.

தங்கள் ஊரும் பேரும் கண்டு உண்டு மகிழ்ந்தேன். தாங்கள் திறந்துவைத்த "பொதிகை நூல் நிலயம்" புகழுறப்பொலிக. ஊரும் பேரும் உள்ளும் புறமும் நன்று. தமிழர் தலைநிமிர்க!

அன்பு, அன்பு,

சுத்தானந்தம்

# 43. நான் அரவிந்தாசிரமத்தில் இருப்பதேன்?

**என்னருமைத் தமிழர்களே,**

எல்லாரும் கேட்கிறார்கள்: "ஐயா, நீர் ஏன் வருஷக் கணக்காக இந்த ஆச்சிரமத்தில் ஒரு சிறு அறையில் அடைந்து கிடக்கிறீர்கள்? நீர் வெளியே வந்து தேச சேவை செய்யலாகாதா? **ஆயிரக்கணக்கான தொண்டர்கள்** தங்களை எதிர்பார்க்கிறார்கள். தாங்களேன் அரவிந்த ஆசிரமத்திலேயே இருக்கிறீர்கள்? தங்களுக்கே தனி ஆசிரமம் நாட்டி, உலகப் புகழ் பெறலாமே....இத்யாதி, இத்யாதி!"

சில நண்பர் இரண்டு முறை ஆசிரமத்திற்கு இடமெல்லாம் அமைத்து அழைக்க வந்து விட்டார்கள். அப்போது ஏதோ ஒரு சக்தி என்னைப்பிடித்து அழுத்தி **"இரு இங்கேயே; வெளியே போனால் மோசம்."** என்று அடக்கியது. உருக்கமாகச் சில அன்பர் அது செய்கிறோம், இது செய்கிறோம்—வாரும்" என்று வலை போடுவார்கள். "இந்த வலையில் சிக்காதே—இரு இங்கேயே," என்று உள்ளே ஒரு சக்தி இழுத்து அடக்கும். கொஞ்சநாள் பொறுத்துப் பார்த்தால், அதன் நன்மை பளிச்சென்று தெரியும்.

மனிதவியல்பின் மாயச்சூதுகளும், சுயநல வஞ்சனைகளும், உலகின் அகம்பாவ வெறியும் பளிச்சென்று தெரியும்படி ஒரு நாடகம் நடக்கும். **"கடவுளே என்னை இந்தக் கொள்ளைக் கூட்டத்திலின்று காப்பாற்றினாய், வந்தனம்"** என்று இன்னும் உறுதியாக அரவிந்தாசிரமத்தைப் பற்றிக் கொண்டிருப்பேன். என் நூல்களை வைத்துப் பெரும்பொருள் திரட்டி, முடிவில் எனக்கே நாமம் வைத்தவர்களுண்டு. எனது பணத்தை வாங்கிக்கொண்டு முன்னே இசைபாடிப், பின்னே வசைபாடினவரும் உண்டு. அப்போதெல்லாம், "உன் கருமம் ஒழியட்டும். சும்மா இரு. எல்லாம் நான்

பார்த்துக்கொள்ளுகிறேன்.'' என்றொரு வாக்குண்டாகும் அது என் யோக சமாதியைப் பன்மடங்கு தீவிரமாக்கும். எனக்கு ஆயிரக்கணக்காகப் பொருள் நஷ்டமாகும்; வெளியுலகில் ஏமாற்ற முண்டாகும். "ஆத்திரப்படாதே உள்ளுலகைப்பார்." என்று என்னப்பன் ஊக்குவான். பிறகு எனது யோக நிலையில் புதிய வைராக்கிய உறுதி ஏற்படும். முன்னினும் பதின்மடங்கு முன்னேற்றம்! ஆனால் ஏமாற்றிய மஹாநுபாவர் உருப்படுவதில்லை. அவர்கள் நன்மைக்காக இறைவனைப் பிரார்த்திப்பது வழக்கம். ஆயிரம், பதினாயிரம் வந்தாலும், அரவிந்தருக்கே தருகிறேன்; ஆயிரம், பதினாயிரம் போனாலும் அவருக்கே அர்ப்பணம்.

**"வந்ததையும்" போனதையும்**
**வாதனைப்பட்டெண்ணாதே,**
**சிந்தையலை யாதிருக்கச் செய்.'**

என்ற கட்டளை அடிக்கடி பிறக்கும், அப்போது எனக்கு வந்த நஷ்டங்களெல்லாம் ஆடிக்காற்று தூசிப்போலப் போகும். எனக்கு வரும் ஆத்மலாபம் பேரின்பமளிக்கும்.

அரவிந்தாசிரமம் எனக்குப் புதுவாழ்வு தந்தது; புதுயுகக்காட்சியளித்தது. இங்கே வரு முன்னே நான் வாழ்ந்த வாழ்வு குப்பை வாழ்வு; இங்கு வந்த பிறகு தான் உண்மை வாழ்வு இன்னதென்று அறிந்தேன். இங்கே வந்திராவிட்டால், என் வாழ்க்கை அரசியற் சூறாவளியில் அடிபட்டு, மிதிபட்டு முடிவில் சட்ட சபையில் கொலுவீற்றிருக்கும்: கவி இசைபெறும்; அல்லது உலகை வெறுத்து மலைக்குகையில் அடைபட்டிருக்கும். ஆனால் என் அந்தரங்கமான ஆதர்சம் நிறைவேறியிருக்காது. என் பேனாவும் இவ்வளவு விரைவாகக் கலைவனத்தில் ஓடி விளையாட முடியாது. இங்கே நான் ஒரு நாளில் செய்து முடிக்கும் வேலை, வெளியே ஒரு மாதமானாலும் நிறைவேறாது. அரவிந்தாசிரமம் எனக்குப் புகலளித்தது. உலகின் கொடுமைகளினின்றும், வஞ்சனைகளினின்றும் என்னைக்காத்தது.

நான் ஆத்மக் கனவில் வாழ்பவன். என் அறிவு நூலறிவன்று; நுண்ணறிவு, உள்ளறிவு. பல்லாண்டுகள் நூலகத்தில் படிந்தேன். மூளைச்சுமைதான் மிச்சம்—ஓர் ஆண்டு புத்தகம் புத்தகமாக உருத்தள்ளுவதைவிட ஒரே நாள் யோகச்சமாதியில் எனக்கு உதயமாகும் அறிவின்பம் பல மடங்கு அதிகமாகும்.

நெடுநாளாக எனக்கொரு ஆசையிருந்தது. எனது நூல்கள் சுமார் **500** உண்டு; அவற்றை அச்சிட ஒரு அச்சகம் வைத்து, லாபத்தைக்கொண்டு **சன்மார்க்கப் பிரசாரம்** செய்யவேண்டுமென்பது என் ஆசை. இதற்காக நான் சில நண்பர்களிடம் நூல்களை வெளியிடத் தந்தேன். தமிழர் ஆதரவால் அவர்களுக்கு நல்ல பணம் கிடைத்தது—என்றாலும் அச்சகம் ஏற்படவில்லை; எனது நூலால் சேர்ந்த பணமும் எனக்குக் கிடைக்கவில்லை. கிடைத்திருந்தால் புதுச்சேரியில் ஒரு வீடு வாங்கி அரிய சன்மார்க்க சேவை செய்யக்கருதினேன். என் சேவைக் கனவு நிறைவேறவில்லை. இதென்ன சோதனை என்று ஏங்கினேன்.

நான் அப்போது புதுயுகப் பாட்டைப் (இது புதிய நூல்) பார்த்துக்கொண்டிருந்தேன். அதென்ன நூல் என்ற கேள்வியுடன் பேச்சுத்தொடங்கியது. பேச்சின் முடிவென்ன? "ஏன் மனதைப்புறம் விட்டலைகிறாய்? இங்கேதான் அற்புதமான அச்சகம் உள்ளதே. **புதுயுக நிலயம்** என்ற பெயரால் உனது நூல்கள் வெளிவரட்டுமே. கவலைப்படாதே, போனதுபோகட்டும். இனித் தெய்வசக்தியை நம்பு. வெளியுலகை நம்பி மோசம் போகாதே. புதுயுகநிலயம் பொலிக" என்று வாக்குப் பிறந்தது. என்ன ஆச்சர்யம்! எனது மகிழ்ச்சிக்கு அளவில்லை. என் எழுதுகோலையும், நூல்களையும் அரவிந்தார்ப்பணம் செய்து விட்டேன். புதுயுகநிலய வேலை அமைதியாக நடக்கிறது. அதற்கு வேண்டிய சாதனங்கள் திருவருளால் வருகின்றன.

இப்படி எத்தனையோ அற்புதங்கள் என் அநுபவத்தில் நடந்தன. என் வாழ்வைப் புரட்சிகரமாக

O-,4MSB,V
N47



மாற்றின மகான்கள் அறுவர். (1) ஒன்பது வயதில் எனக்கு தியானயோகம் பயிற்றிய பரமஞானி (2) எனது தேச பக்தியினையும், கலைத்திறனையும் போற்றிய வீர விளக்கு வ. வே. சு. ஐயர் (3) பொதுநல வாழ்விற்கு வழி காட்டிய தியாகமூர்த்தி மகாத்மா காந்தி (4) எனக்கு இதய வித்தையை உபதேசித்து சமாதி சித்தி அளித்த ரமண மஹரிஷிகள் (5) நான் இந்து தருமத்தை மறந்து பிறமதம் புகும் தருவாயில் சத்தியார்த்த பிரகாசத்தால் என்னைத் தடுத்தாண்ட தயானந்தர் (6) வாழ்வே யோகம் யோகமே திவ்ய ஜீவனம் என்ற உண்மையை எனக்கு நேருக்கு நேராகக் காட்டிய ஸ்ரீ அரவிந்தர்.

நான் முதன் முதலில் தரிசித்ததுமே ஆசீர்வதித்து அழகான புன்னகை பூத்தார். மறுநாளே என்னை ஏற்றுக்கொண்டார். என் மனக்குதிரை அங்குமிங்கும் துள்ளி வழிதவறும் போதெல்லாம் லகானைப் பிடித்திழுத்துப் பரமாத்ம சக்தியின் திருவடியில் கட்டிவிட்டார். மற்றொன்று, சுத்தமே என் வாழ்க்கையின் லட்சியம். உலகைவிட்டு ஓடுவதன்று; உலகிலேயே சுத்தமாக வாழ்வது பேரின்பம் என்பதை ஸ்ரீ அரவிந்தரைப் போல் வேறு யாரும் எனக்குக் காட்டவில்லை. ஆண், பெண் உறவில் அப்பழுக்கற்ற சுத்தம் எங்காவது இருக்குமானால், அது அரவிந்த நிலையமே. இங்கே இருபாலாரும் எவ்வித மனவிகாரமுமில்லாமல் கலந்து தெய்வத்தொண்டு செய்கிறார்கள். இருபாலாரும் இயற்கையாகப் பிரமசரியம் காக்கிறார்கள். குடும்பிகள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் பிரமசரியமே காக்கிறார்கள். யோகத்தில் தீவிரமானவர்களுக்கு இங்கே முதல் இடமுண்டு. வெளி வாழ்க்கையில் எதற்கெடுத்தாலும் சத்தமும், சண்டையுமாயிருக்கக் காண்கிறோம். இங்கே அபாரமான காரியங்கள் நடக்கின்றன. எத்தனையோ தொழில்கள்! எத்தனையோ புலவர்கள் விளங்குகின்றனர்! ஆனால் எவ்விதமான விளம்பரமும், வீண் பேச்சும், வம்பளப்பும் இங்கே காண முடியாது. அவரவர் வேலைகளை அவரவர் அரவிந்தார்ப்பணமாகச் செய்கி

ARCHIVES
105782

ருர்கள். எல்லாரும் இறைவன்பணிசெய்கிறோம் என்பதை உணர்ந்து செய்கிறார்கள். வேலைகளும் பூரணமாக நடக்கின்றன. இந்தக் கர்மயோகம் அரவிந்தாசிரமத்தின் தனிச் சிறப்பாகும்.

இந்த மௌன நிலயத்தில் எவ்வளவோ பெரிய அற்புதங்கள் நடக்கின்றன. இங்கே விளையாடும் விஞ்ஞான சக்தி புதிய தேவமனிதரை உருவாக்குகிறது. அந்தப் புதிய வாழ்விற்கு என்னை ஆட்கொண்ட அரவிந்தரை வணங்குகிறேன். உலகின் மோசடிகளிலிருந்து என்னைத் தடுத்காட்கொண்ட அரவிந்தசக்தியைப் பன்முறை வணங்குகிறேன்.

தமிழரின் அடிமைத் தனத்தைத் தீர்க்கவே இனி தவம் புரியவேண்டும்.

அன்பு வாழ்க!

சுத்தானந்தம்.

# மௌனம்

**தமிழ் உலகத்திற்கு:—**

கவியோகி—சுத்தானந்தரை கூட்டங்களுக்குத் தலைமை தாங்க பலமுறை அழைத்தோம்—அதற்கு "உடலை மோனத்தனிமையில் ஊன்ற வைத்துள்ளபடியால் வர்முடிந்திலது—எனினும் உளங்கொண்டு தங்கள் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலும்" என்று எழுதி விடுகிறார்கள்.

அன்னாரை நாங்கள் நேரில் அணுகி, "இனி எப்போதுமே பேசக்கூடாது என்று விரதம் பூண்டு விட்டீர்களா? அல்லது என்றாவது உங்கள் பேச்சைக்கேட்க இந்த உலகம் கொடுத்து வைத்துள்ளதா?" என்று கேட்டோம். உடனே ஆங்கில எழுத்தில் பளிச்சென்று பதில் வந்தது. அதை அப்படியே ஆங்கிலத்திலேயே இங்கு அளிக்கிறோம்:—"Silence has a force more dynamic than the rattle of tongues. The work of silence is eternal. When occasion calls inspiration will mouth the heart's exaltation."

கே. வீ. வீ.

அன்பு! பழம் நீ.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 24 | ஜயங்கார் | ஐயங்கார் |
| [illegible] | 24 | பண்டங்களே | பிண்டங்களே |
| [illegible] | 25 | ஆசையாவை ? | ஆசையாணவ |
| [illegible] | [illegible] | அகரநிலையம் | அசுரநிலையம் |
| [illegible] | [illegible] | சமயம் | சமய [ச்சி |
| [illegible] | [illegible] | புதுவை பாரதியார் | தனித்தமிழ் ஆராய் |
| [illegible] | [illegible] | தமிழர் | தமிழ் |
| [illegible] | [illegible] | கவி | கவியான |
| [illegible] | 2 | நாட்டில் சி | நாட்டில் |
| [illegible] | 17 | சத்தசன்மார்க்க | சுத்தசன்மார்க்க |
| 31 | 14 | மகுடந்தை | மகுடத்தை |
| 32 | 24 | குடலைப் | உடலைப் |
| 46 | 29 | தேகத்திலேயே | தேக்கத்திலேயே |
| 46 | 30 | பீடித்தலையேல் | பிடித்தலையேல் |

[74]

43883

**1. The Gospel of Perfect Life** — Rs. 3-8

(YOGA SIDDHI)

*By*

*Yogi Sri Shuddhananda Bharathiar*

..................All religious and systems of yogas and philosophies find a synthesis in this immortal work by an immortal seer-poet............Its reading ennobles and transforms life............

Fine Monotype Edition — 224 pages.

**2. Yogi Shuddhananda Bharathi** — Rs. 4-0

A STUDY)

*By*

*Dewan Bahadur K. S. Ramaswami Sastriar*

..................It is a book to be read and reread by all........

250 pages.

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் புதிய நூல்கள்

**3. ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம்** — ரூ. 2-8

.........ஸ்ரீ அரவிந்தர் எப்படி வாழ்ந்தார்; உலகிற்கு எத்தகைய ஞான நிதியைத் தந்தார்............மனித சமுதாயத்திற்கு எப்படிப்பட்ட திவ்ய ஜீவன ரகசியத்தைக் காட்டினார். அவரது ஆசிரமத்தின் நடைமுறை என்ன என்பதை யெல்லாம் இந்த நூல் விரிவாக விளங்குகிறது.

200 பக்கங்கள்.

**4. பகவத் கீதை (வசனம்)** — ரூ. 1-4

(சுத்தானந்தர் தமிழ்)

............பகவத் கீதை இந்தியாவின் பொதுமறை.........அதை மூலத்தில் உள்ளபடியே மிகத் தெளிவான நடையில் சுத்தானந்தர் மொழி பெயர்த்திருக்கிறார்.

கையடக்கமான பிரதி — 200 பக்கங்கள்

**5. அரவிந்தரின் 'அன்னை'** — ரூ. 0-8

............மிகத் தெளிவான நடையில் சுத்தானந்தர் தமிழ்ப்படுத்தியது

## புதுயுக நிலயம்

புதுச்சேரி

Arutperunjothi Press, M.S. 396 C-2000 1-9-47.

# எமது அடுத்த வெளியீடுகள்

சொல்லின் செல்வம்—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.

பூந்துறை — ,, ரா. பா. மு. கனி, B.A., B.L.

பெண்களுக்குச் சம உரிமை—கல்லூரி மாணவிகள் எழுதியது.

1. திரு. ராஜேஸ்வரி பாஸ்கர் 2. திரு. C. R. சரஸ்வதி
3. ,, த. ந. ஆனந்த நாயகி 4. ,, "தனம் நீ"
5. ,, கே. வி. ராஜலட்சுமி 6. ,, கரிமா பேகம்
7. திரு. கமலா பாக்கியநாதன்

## War of Love on the Tamils

(In Tamil)

By

PINETAMIL SELVAN

**C. R. Palaniyandi**

(Publicity officer-Y. M. C. A. Patti Manram)

AND

**K. V. Viraraghavan, B.A., B.L.**

A book daringly different and breaking *new ground.*

Open letters to **famous** authors offering *constructive criticism*

*Miss not your copy* : *Price : Re 1-0-0*

COMING SHORTLY :—**"Public Speaking"** in Tamil by the same Authors

NEW INDIA BOOK HOUSE

RAMACHANDRAPURAM P.O. (TRICHY DT.)

அருட்பெருஞ்ஜோதி அச்சகம்
7-99 அம்மன் கோயில் தெரு,
சென்னை-1 M.S 396 2000